போன் நெ. 15. விலை 2 அணா REGD. NO 464

திராவிடநாடு

மலர் 12 | 6—9—53 | இதழ் 10



"சிறைவாசம், என் பொதுவாழ்க்கையிலே, இது முதல் முறையல்ல. ஆச்சாரியார் ஆட்சிக் காலத்திலே, இந்தி எதிர்ப்பு நடைபெற்றபோது, சென்னைச் சிறையிலே இருந்திருக்கிறேன்—நான்கு மாதங்கள். சைதாப்பேட்டை சப்ஜெயிலிலே இருந்திருக்கிறேன்—ஒரு வாரம். கவர்னர் ஜெனரலாக ஆச்சாரியார் வந்தபோதும் சில நாட்கள் இருந்திருக்கிறேன். பலமுறை சிறைசென்று மனமெருகேறிய பெரியாருடன் பழகி இருக்கிறேன். எனவே, சிறை என்னைச் சிதைத்துவிடாது."

1950 செப்டம்பர் மாதம் 'ஆரியமாயை'யால் ஆறு மாத சிறைத்தண்டனை பெற்றபோது மேலே கூறியது போல் கூறி விடைபெற்றார்! 1953 செப்டம்பரில், ஆச்சாரியார் 'கருணை'யால் மூன்று மாத சிறைவாசம் பெற்றுச் சென்றிருக்கிறார்! அன்றும், இன்றும் அவர் நமக்குக் கூறிச் சென்ற வாசகம்:

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை
நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!"

"சென்று வருகிறேன்; செயலாற்றுங்கள்.

தன்னந்தனியே அல்ல—எனக்கு மகிழ்ச்சியும் பெருமையும் தரும் காவலருடன் சென்று வருகிறேன்—எதிர்பார்த்ததுதான்; எனவே, ஏக்கம் எழக் காரணமில்லை; அறப்போரின் விளைவு இது. அகமகிழ்வே காரணமிருக்கிறது"

*

"கண்ணீருடன் பிறந்தோம்—காடு மேடுதான் நம் எதிரில்—தூய நோக்கமும், தளரா ஊக்கமுமின்றிப் பிறிதோர் துணை இல்லை. துவக்கத்தில் இன்றோ—ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேர்விட்டிருக்கிறது, தி மு கழகம்"

*

"வேறு எந்தக் கழகத்திலும், கட்சியிலும் காணக் கிடைக்காத 'குடும்பப் பாசம்' தி. மு கழகத்தில் இருக்கிறது; கழகத்தின் வலிவும் பொலிவும் பெரும் பகுதி இதிலே தான் இருக்கிறது"

*

"நாங்கள் உள்ளே இருக்கும் போது, கழகத்தின் கண்ணியத்தைப் பன்மடங்கு பொலிவுள்ளதாக்கும் வகையில், பணியாற்றுங்கள்"

*

"இல்லந்தோறும், நல்லவர் உள்ளந்தோறும், தி. மு. க. சென்று இடம் பெற வழி வகை செய்யுங்கள்"

*

★ செயலாற்றுங்கள்! ★

நாங்கள் ஐவரும், சிறை செல்வது குறித்து, மனக்கோதிப்போ கஷ்டமோ கொள்ளவேண்டாம் — ஏறத்தாழ, ஐயாயிரவர் சிறை சென்றுள்ளனர்—அறுவர் மாண்டனர்—கரமிழந்தார், ஒரு தோழர்; காலிழந்தார் மற்றொருவர்; திராவிடம் 'இரத்தக் காணிக்கை' செலுத்தி இருக்கிறது, விடுதலைப் போரிலே ஒரு கட்டம்—விடி வெள்ளி முளைக்கும் கட்டம்.

நாம் கொண்டுள்ள கொள்கை சிலாக்கியமானது—மேற்கொள்ளும் முறைகள் அறநெறியினின்றும் வழுவாதன—நமது கழகம், கண்ணியத்தையும், அமைதியையும் கடைப்பிடித்து ஒழுகும், யகத்தான தோர் மக்கள் சக்தி. எனவே, நாம், நமது கடமையைச் செய்கிறோம்; ஆதிக்கக்காரர் அஞ்சுகின்றனர்; அடக்குமுறை கிளம்பித் தாக்குகிறது; பணி பயனளிக்கிறது என்ற முறையிலே, அடக்குமுறையை வரவேற்கிறோம்—வெற்றிப் பாதை கருத்துக்குப் புலனாகிறது, தெளிவாக!

இந்த அரிய பணியிலே, பங்கேற்கும் வாய்ப்புப்பெற்ற நாங்கள் உண்மையிலேயே, பூரிப்படைகிறோம். இனி, நாங்கள் மேற்கொள்ளும் சிறைவாசமும், இந்தப் பணியிலே ஒரு பகுதியே, என்று நம்புகிறோம் —அந்த நம்பிக்கையே, எமக்குச் செந்தேன்.

நாடு, கொந்தளிப்பிலேயே இருக்கிறது — அறப்போர்க் கோலத்தில் இருக்கிறது — ஆதிக்கக்காரர்களின் ஆர்ப்பரிப்பும் சாகசமும் மாறி மாறிக் கிளம்பிக் கொட்டியபடி உள்ளன—. திராவிடம், எதையும் தாங்கிக் கொள்ளும் உள்ள உரம் படைத்திருக்கிறது; எனவே, இறுதி வெற்றி நமக்கே—அஞ்சேல்!

இப்போதே கூடத்தான், வெற்றி நமக்குத்தான் — ஆதிக்கக்காரருக் அல்ல. நாடு அவர்களின் போக்கைக் கண்டிக்கிறது, நல்லவர்கள் கண்டிக்கின்றனர்—உலகம் கூர்ந்து கவனித்தவண்ணம் இருக்கிறது.

ஒரு இனம், (திராவிடம்)தன் விடுதலைக்காக அறப்போர் துவக்கிவிட்டிருக்கிறது, என்ற வரலாற்றுச் செய்தி, உலகுக்குத் தரப்பட்டாகிவிட்டது — முக்கியமான செய்தி, தோழர்களே! மிக முக்கியமான செய்தி.

அலட்சியம், நெரித்த புருவம் இவை போதுமானதாகத் தோன்றவில்லை! ஆட்சியாளர்களுக்கு. அடக்குமுறையைத் துணைக்கு அழைத்திடவேண்டி இருக்கிறது— நமது வளர்ச்சியின் அறிகுறி இதுவென்போம்.

எனவே, சிறை புகுமுன், செய்த பணியும், பெற்ற வெற்றியும் சாமான்யமானவை அல்ல, என்ற திருப்தியுடன் செல்கிறோம்—விட்ட இடத்திலிருந்து தொடங்கி வெற்றிப் பாதையிலே நடந்து, வாகை சூடிடும் ஆற்றல் படைத்த உங்களிடம், கழகத்தை ஒப்படைத்துவிட்டு. கழகத்தின், அகமும் புறமும் உங்கட்கு நன்கு தெரியும்—புன்னகைப் புலிகளும், நயவஞ்சக நரிகளும் உலவுகின்றன—எனினும், கடமைக் கணைகொண்டு, அவைகளை விரட்டிடும் ஆற்றல் உமக்கு உண்டு, என்பதை உணர்கிறோம், மகிழ்கிறோம்.

நாங்கள் உள்ளே இருக்கும்போது' கழகத்தின் கண்ணியத்தைப் பன்மடங்கு பொலிவுள்ளதாக்கும் வகையில், பணியாற்றுங்கள்.

பலாத்காரத்துக்குத் துளியும் இடம் தராதீர்கள்; தாக்கினால் (தாக்குவர்) தாங்கிக்கொள்ளுங்கள்—தாயகத்தின் தளைகளை உடைத்தெறியும் பணியில், ஈடுபட்டுள்ளோருக்கு, இந்த நெஞ்சு உரம் நிச்சயம் தேவை.

கழகத்தின் அன்றாடக் காரியங் களை, நாங்கள் வெளியே இருப்ப தாக எண்ணிக்கொண்டே, எப் போதும் போல் செய்துவாருங்கள், கழக இதழ், 'நம் நாடு' வளரும் வ — அதனை வனப்புள்ளதாக்கும் பெரும் பொறுப்பும் உங்களைச் சார் ந்ததே—அந்தக் கடமையை மற வாதீர்.

கழகத்தின் தலைமை நிலைய் பொறுப்புகளை ஏற்று நடத் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம் எல். ஏ. முன்வந்துள்ளார். அவரு க்குக் கழகத் தோழர்களும், கிளை கழகங்களும் முழு ஒத்துழைப்ப நல்கி, கழகத்தின் செயல் முறை களையும், கட்டுப்பாட்டையும் வெற்றிகரமாக நடத்தித்தர வேண் கிறோம்.

தூத்துக்குடி, கல்லகுடி ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங் களைப் பொறுத்து, வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. அந் வழக்குகளை வெற்றிகரமான முறை யில் நடத்த, கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் தங்களாலா எல்லாவிதமான உதவிகளையும்— பொருள் உதவி உள்பட, செய் வேண்டும்.

போராட்டங்களில் ஈடுபட் மரணமடைந்த வீரர்களின் குடு பத்தினருக்கு அரசாங்கத்தார் தக் நஷ்ட ஈடு அளிக்கும்படி செய் துடன், கழகத் தோழர்களும் தங் ளாலான உதவியைச் செய்யவேண் கிறோம்.

சென்று வருகிறோம், தோழர்களே சென்று வருகிறோம், செயலா றுங்கள்.

—அண்ணாதுரை
நெடுஞ்செழியன்
சம்பத்
மதியழகன்
நடராசன்

"கண்ணீர்க் கடலில், நிற்கிறீர்!"

காலம்—பாடம், தரும்

ஆச்சாரியாருக்கு எச்சரிக்கை

செப்டம்பர் முதல் தேதி, சென் னச் சிறையின் கதவு திறந்தது! மூடிக் கொண்டது!!

திராவிடத்தின் திலகங்களாம் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தாழர்கள் மதியழகன், சம்பத், நெடுஞ்செழியன், நடராசன்—ஆகி யார், சிறைக்குள், பூட்டப்பட்டு ட்டனர். நேற்று வரை, அவர் ளின் முழக்கத்தைக் கேட்டோம்—ளவளாவினோம் — இன்னும் மூன்று மாதகாலத்துக்கு, அவர் ளை திராவிடம் காண முடியாது! வர்தம் குரலைக்கேட்க முடியாது!!

பூத்துவரும் புதுயுகத்தின் தலை மை, அவரது மக்களை விட்டுப் பிரித்து, தன்னுடைய எதேச்சாதி கார இருப்பிடத்துக்கு இட்டுச் சென்று விட்டது, அரசாங்கம். ான், பாடுபடும்; மக்களைக் கண்டு கிழ்ந்து பணியாற்றிய அவர்களை, ட்டத்தின்' துணைகொண்டு,சிறை தில்களுக்குள்ளே, உலவ விட்டு ட்டது, சர்க்கார்.

சிறைக்குள் அண்ணா! சிறைக்குள் ம் சகோதரர்கள் நால்வர்!!

புன்னகை தவழும் முகத்தோடு பாய் விட்டார்கள், அவர்கள் — பருமூச்சுவிட்ட, திராவிடம் பார்க் றது, அவர்களை அடைத்து வைத் ருக்கும், சிறைச்சாலையை.

அகண்டு உயர்ந்த மதில்கள் தான், தன்படுகின்றன—விரிந்த சிந்தை ம் பரந்த உள்ளமும், சிறந்த தாண்டுமிக்க தி. மு. க. செல்வத் தக் காண முடியவில்லை, நம்மால். 117, 341, 108, 128—சாதாரண ண்களல்ல! நம் சகோதரர்களை மூத்துச் சென்று பூட்ட, சர்க்கார் பயோகித்த, சட்ட 'அம்புகள்!' ானத்திலே பறக்கும் வெண்புறுக் ளை நோக்கி, வீணை கொண்ட வேடன் வீசிடும், அஸ்திரங்களைப் போல—மக்கள் மன்றத்திலே பவனி வந்த மாவீரர்கள் மீது ஆச் சாரியார் அடக்குமுறை அம்புகளைப் பிரயோகித்து, அங்கே, கொண்டு, சென்று பூட்டி விட்டார்—ஆட்சித் துணை கொண்டு.

அவர், நாடாள்கிறவர்! இவர் களோ,நாட்டின் உரிமையாளர்கள்!!

ஆனால், அவர், உல்லாசப் பவனி வந்து கொண்டிருக்கிறார்—தம் மந் திரிமார்களுடன் மதுரைக்குப் பறந்து சென்று சுந்தரம் அய்யங் கார் வழங்கும் சோபித வரவேற் பைப் பெற்றுக் கொண்டு வருவதும் —வழக்கமாகப் பேசுவதும், பழக்க மான, படாடோபத்தைக் காட்டிக் கொள்வதுமாக, விளங்குகிறார். இவர்களோ, சிறைச் சாலைக்குள்! சிறகுகள் வெட்டப்பட்ட புறாக் களைப் போல், கஞ்சிக்கலயத்தை யும், கம்பித்தட்டிகளையும் பார்த் துக்கொண்டு!!

திராவிடம், தேம்புகிறது! ஒளி யிழந்த வானம் போல், காட்சியளிக் கிறது!!

ஊராள்பவர், உதட்டிலே 'புன் னகை அரும்புகிறது—சிறைச்சாலை யைப் பார்க்கிறார்! சிரித்துக் கொள் கிறார்!!

மக்கள் மன்றமோ, பெருமூச்சு விடுகிறது — சிறைமதில்களைப் பார்த்து, திகைக்கிறது! தேம்பு கிறது!!

"சிறைச்சாலை—சிந்தனையாளர் களுக்கோர், கலாசாலை," என்று, கேள்விப்பட்டிருக்கிறோம், நாம். அங்கே, நடமாடும் 'நாட்டின் கலா சாலைகளாம்', ஐவர், அடைக்கப் பட்டுக் கிடக்கின்றனர்.

மூன்று மாதம்! 90 நாட்கள்!! இன்று அவர்களை, 'திறந்து மூடி' அழைத்துக்கொண்ட சிறைக்கோட் டம், ஓர்நாள் அவர்களை 'திறந்து' விடுதலை செய்யாமல் போகாது.

மூடிய கதவுகளை மூடியபடியே வைத்திருக்க, ஆட்சி அதிகாரம் ஏந் தியவர்களாலும் முடியாது! அங்ங னம் முயன்றாலும், மூடிக்கிடந்த இதயங்களையெல்லாம் திறந்து சிந் தனை ஒளிதிகழச் செய்த, தி. மு. க. 'கதவு மூடியிருக்கும்படியும்' விட்டு விடாது!!

எனவே, சிறை சென்ற மாவீரர் கள் மீண்டும் நாட்டில்,பவனிவரவே செய்வார்கள். ஆனால், அவர்கள் இந்நாட்டுக்குப் புரிந்துவந்த பொதுச் சேவையின் நாட்களை வீணாக்குகிறதே இந்த வீணாட்சி எனும் எண்ணமே, நம்மை வாடச் செய்கிறது.

சிறைக் கதவுகள் — 'திறந்து மூடும்' கட்டம், தி. மு. க. வுக்கு புதியதல்ல. பழைய கதை!

எனினும், சிறைக்குள் பூட்டி சித்ரவதை செய்வதால் சிந்தனை யாளரின் கூடாரத்தை அடக்கி விட லாம் என்று மனப்பால் குடிக்கும் 'ஜாரின்' சின்னம் உலகில் ஒழிய வில்லை—என்பதற்கோர், எடுத்துக் காட்டாயிருக்கிறது இந்நாட்டை ஆள்வோரின்போக்கு. அந்த எதேச் சாதிகாரப் போக்கினை எதிர்த்து தி. மு. க, சவால் விட்டுக்கொண் டிருக்கும், தியாகக் கட்டம் இது.

நாடெங்குமுள்ள சிறைக்கதவு கள்,தினசரி திறக்கின்றன—மூடுகின் றன. திருச்சி சிறையிலே எழுத்துச் செல்வர் கருணாநிதி 'ஆறுமாதம்' அனுபவித்துக்கொண்டிருக்கிறார் —தூத்துக்குடி வீரர்கள் சிவசாமி, தங்கப்பழம், சாமி, நடராசன், ரத்னம் முதலியோர், 'தண்டனை எது'வென அறியாமலே கஞ்சிக் கலயம் ஏந்திக்கொண்டிருக்கிறார் கள்! வேலூர் சிறையில் அறப்போர் காளைகள் 'மூன்று மாதம்' கழித் துக்கொண்டிருக்கிறார்கள்—கடலூரி லும் அவ்வண்ணமே! திருச்சி— கோவை—சேலம் — மதுரை, எங் கும், அப்படியே ஆயிரக்கணக்கான அறப்போர் வீரர்கள் உடல்நல மின்றி உயிருக்கு மன்றாடும் [illegible]

மையிலும் தாய் செத்ததைக் கேட்டும் சென்று கண்டுவர முடியாத மைந்தனும், தந்தை உயிர் நீத்தார் எனும் துயரச் செய்தி கேட்டும், அவரது முகத்தைப் பார்த்து வருகிறேன் ஐயா!' என்று கெஞ்சிக் கேட்டும், அனுமதி தாராமல் தடுக்கும் அக்கிரம ஆட்சியின் போக்கை கண்டு மனம் புழுங்கியும்—ஆனால், இத்துணைக் கொடுமைகளையும் தாங்கும் உறுதியினை நல்கும் உத்தம இலட்சியத்தை எண்ணியும், தோழர்கள் கிடக்கிறார்கள்—உற்சாகமாக.

அத்தகைய வீரர்கள் உலவும் கோட்டத்துக்கு, 'ஐவரும்' சென்று விட்டார்கள். எந்தக் குற்றச்சாட்டுகளின்மீது, நம்மரும் தோழர்களை— தங்களது இல்லம் துறந்து, மனைவியை மறந்து, மழலைக் குழந்தைகளை ஏங்கவிட்டு, குடும்பங்களைத் துறக்கும்படி செய்து — சிறைக்குள் கொண்டு இந்த ஆட்சி பூட்டியதோ, அந்தக் குற்றங்களைத் தூண்டிவிட்டவர்கள் எனும் குற்றம் சாட்டி, 'ஐவரையும்' கொண்டு பூட்டிவிட்டார்கள், அவர்களுடன்.

'குற்றம் புரிந்தார்கள்' என்று தோழர்கள் ஐயாயிரம் பேர், சிறைக்குள் தள்ளப்பட்டார்கள்.

'குற்றம் செய்யத் தூண்டினார்கள்' என்று ஐவரையும் கொண்டுபோய் தள்ளியிருக்கிறது, 'தர்பார்' நடாத்தும், சர்க்கார்.

தூண்டினர்!— சரித்திரத்தில், மிக மிகப்பழக்கப்பட்டவார்த்தை—மிக மிகப் பெரிய சரிதவீரர்களின் மீது வீசப்பட்ட வார்த்தை — அதை, வீசினர், ஐவர் மீதும். குற்றங்களைச் செய்யத் தூண்டினராம்!—அண்ணாவும், அவர்தம், தம்பிகளும். ஆச்சாரியாரின் அரசாங்கம், வீசிய குற்றச்சாட்டு, இது.

மறியல் செய்யத் தூண்டினார்கள்.

ரயிலை நிறுத்தத் தூண்டினார்கள்.

இதுதான் 117, 314, 128, 108— இதனைத்தான், வீசிற்று—சர்க்கார். இந்தக் காரியங்களைச் செய்ய 'தூண்டியது தாங்கள் தான்,' என்பதை அண்ணாவோ, அவர் தம், தம்பிமாரோ மறுக்கவில்லை. ஏன் மறுக்க வேண்டும்? இந்த முறைகளை அனுசரித்தால் தானே, முதலைக்குணம் படைத்த, ஒரு சர்க்காரின் கண்களையும் காதுகளையும் திருப்பச் செய்ய முடியும். என்கிற வெட்கங்கெட்ட நிலையில் நாடு இருக்கும்போது, இவ்வழி தவிர, வேறென்ன இருக்க முடியும், எனவே, ஐவரும் ஏற்றனர்—எனினும் 'தூண்டினர்' எனும் சொல்லைப் போட்டு, அவர்களை, ஆண்டுக் கணக்கில் சிறையில் மடக்கிட, 'சதி' செய்வது விளங்கவே—'தூண்டியது' பற்றி, மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக, நீதி மன்றத்தில், நின்றனர்—வழக்காடினர். எதிர்பார்த்தது, வீண் போகவில்லை!

"இவர்கள், பலாத்காரவாதிகள்!"

"பயங்கரமானவர்கள்"

"வகுப்பு துவேஷம் உண்டாக்குபவர்கள்"

இத்தகைய குற்றங்களை வீசி — மாசு உண்டாக்க முனைந்தது, ஆச்சாரியாரின் ஆட்சி. முகத்தில் கரி பூசிக்கொண்டது. நீதி மன்றத்தில், நாம் யார் என்பதும், நம்முடைய நடைமுறை வழிகள் எதுவென்பதும், தெள்ளத்தெளிவுற விளங்கியதனாற்றான், நீதிபதி அவர்கள் தம்முடைய தீர்ப்பில், கூறினார்கள், "இவர்கள் அமைதியான முறையில் காரியங்களைச் செய்யுமாறு கட்டளை பிறப்பித்தனர் என்பதில், சந்தேகமில்லை", என்பதாக.

பலாத்காரவாதிகள்! — எனும் பழிச் சொல்லை வீசுவதோடு, ஐவரையும் பிடித்து, தன்னுடைய ஆட்சிக்காலம் முடியும் வரை, மூடிவைக்கத் திட்டமிட்டது, ஆச்சாரியார் ஆட்சி.

அந்தச் 'சதி', நீதி மன்றத்தின் முன், பலிக்கவில்லை. நேர்மை, வெற்றி பெற்றது! சூது தோற்றது!!

மறியல் செய்யத் தூண்டினர்— ரயிலை நிறுத்தச் சொல்லினர் — ஏன்? இதற்கான காரணத்தை நாடு அறியும்; ஆனால் சட்ட ஏடு ஏற்காது. சட்ட ஏட்டுக்கு—ஏன், எதற்காக — என்பது தேவையில்லை. நடந்ததா! இல்லையா! இதுபோதும்.

மறியல் நடைபெற்றதையும்' ரயிலை நிறுத்தியதையும், மறுக்கவில்லை, ஐவரும்

ஆனால், இந்தக் காரியங்களில் இயக்க வீரர்களை ஈடுபடச் செய்ததால், 'இவர்கள் ஐவரும் மகத்தான குற்றம் செய்தனர்' என்று கூறி கொடூரமான தண்டனையைப் பெற்றுத்தர, குறுக்குவழி புகுந்தது சர்க்கார்.

இந்தக் கோணல் புத்தி, ஆச்சாரியார் ஆட்சிக்கு ஏற்படும் என்று நாம் ஆரம்பத்தில் எதிர்பார்த்தது, வீண்போகவில்லை — நாம், எண்ணியதை மெய்ப்பிக்கும் சம்பவம் ஒன்றும், நீதிமன்றத்தில், நடைபெற்றது.

நீதிபதி அவர்கள் தீர்ப்பைக் கூறத் துவங்கினார். அப்போது, திடீரென எழும்பினார், சர்க்கார் வக்கீல்—அவர், வக்கீல்! சர்க்கார் சொல்லியபடி ஆடவேண்டியவர் தானே!!—நீதிபதியைப் பார்த்தார், "கடுமையான குற்றங்களைப் புரிந்த இந்த எதிரிகளுக்கு, நீங்கள் கடுமையான தண்டனையை வழங்கவேண்டும்" என்று கேட்டார் — நீதிமன்றங்களில் சாதாரணமாக காணமுடியாத விசித்திரம் இது! என்று நம் வக்கீல் தோழர் நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டார்—

நமது தலைவர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதில், அந்தளவுக்கு அக்கரை காட்டிற்று, ஆச்சாரியார் அரசாங்கம்.

கடுமையான தண்டனை!

கொடுமையான நடவடிக்கை

எடுக்கவேண்டிய அளவுக்கு, என்ன துரோகத்தை நாம், செய்தோம், ஆச்சாரியாருக்கு? அவர் அமர்ந்திருக்கும் மந்திரி நாற்காலியில் இடம் கேட்டோமா! அல்லது, மாதா மாதம், கவர்னர் ஜனரலாக இருந்ததற்கான 'கைக் கூலி'யைப் பெற்றுக்கொண்டிருக்கிறோமே, அதனை 'களவாட' முயன்றோமா, அவர் வீட்டுக்குள் புகமுயன்றோமா, எதுவுமில்லையே—இவைகளை எண்ணியும் பார்க்கும் இழிமதிகொண்டதல்லவே, நம் கழகம் — எனினும், ஏனிந்த ஆத்திரம் அவருக்கு? எதற்காக இவ்வளவு துவேஷம் நம்மீது?

ஆச்சாரியார் கொண்டுவந்த கல்வித் திட்டத்தை எதிர்த்தோம் என்பதால்—அவருடைய அநாகரிகப் பாதையைக் கண்டிக்கிறோம் என்பதால்—புதுயுகத்தை, அறிவு வழியில் சிருஷ்டிக்க முயலுகிறோம் என்பதால் — அவரது கேடுகளை எடுத்து விளக்கி தடுக்கும் அளவுக்கு சக்தி பெற்றிருக்கிறோம் என்பதால்.

இதனாலேயே, அடக்கு முறைகளையும் அவிழ்த்து விட்டார்!

நாட்டின் வழிகாட்டிகளையும், நெடு நாட்கள் பூட்டிட நினைத்தார்! பலாத்காரவாதிகள் என்ற பழியைச் சூட்ட நினைத்தார்!

நீதிமன்றம், நாம் துவக்கிய அறப் போர்களுக்கான, காரணங்களைப் பரிசீலிக்கவில்லை — தற்போதுள்ள சட்டப்படி, அது தேவையுமில்லை. அதனாலேயே, சட்ட ஏடுகளின் துணைகொண்டு, நமது தலைவர்கள் தண்டிக்கப்பட்டு, சிறைக்குள் கொண்டு பூட்டப்பட்டுவிட்டார்கள்!

"கோர்ட்கலையும்வரை காவல்—ரூ. 500 அபராதம் — கட்டத் தவறினால், மூன்றுமாதம்"—

இதுவே, நீதி மன்றம், வழங்கிய தீர்ப்பு. இதைவிடக் 'கடுமையான' தீர்ப்பு கிடைக்க வில்லையே என்பது—சர்க்காருக்கு, வருத்தம். இத்தகைய தண்டனையைப் பெறவேண்டிய அளவுக்கு என்ன செய்தனர், நம் தலைவர்கள்—என்பது, நாட்டுக்குள்ள சந்தேகம்.

"அப்படியா? மூன்றுமாதமா!"

"ஏன்! எதற்காக!!"

இப்படி, ஆங்காங்கு, மக்கள் மன்றத்தில், குரல் எழும்பாமற் போகவில்லை—காரணம், தலைவர்கள், செய்த குற்றம் என்ன?

கல்வித் திட்டத்தைக் கை விடு!
அரசியல் கண்ணியம் கற்றுக் கொள்!!

இதுதானே—நம்முடைய, அறப் போருக்கான, காரணங்கள். அதனை, நாடு, நன்கு அறியுமாதலால், தீர்ப்பைக் கேட்டதும் திகைக்கிறது! அண்ணாவும், அவர்தம் தம்பிமாரும் அடைக்கப்பட்ட சிறைச்சாலையைத் திரும்பிப் பார்க்கிறது!!

நீதி மன்றத்தின் முடிவை, மறுக்கவோ—வாதிடவோ—விரும்போம், நாம்.

ஆனால், நம்முடைய 'ஐவரை'யும், குற்றவாளிகள் என்று கூறி, கண்டிலேற்றி, தண்டனை பெறச் செய்த, சர்க்காரின் போக்கினை மட்டும், நம்மால், மறந்திட முடியாது.

நாம்—சுயநல லாபம் கொண்டல்ல, மறியல், துவக்கியது.

சொந்த விஷயத்துக்காகவல்ல, [illegible]யில் திருத்தப் போராட்டத்தைத் துவக்கியது.

சுயநலம்! சொந்த விஷயம்!! — இரண்டையும் வைத்து ஆச்சாரியாரின் ஆட்சியைக்கவிழ்க்க விரும்புவோர், நாமல்ல. 'கதர்க் கூடாரத்துக்குள்', நடைபெறும் வேலை.

ஆனால், நாட்டை, வேட்டைக் காடாக்கும் விபரீத நிலைக்கு, அன்பர் ஆச்சாரியார், இழுத்துச் செல்கிறார்.

அதனை, நாட்டின் சொந்தக்காரர்களாகிய நாம்—சர்க்காரின் பொக்கிஷத்துக்கு வரி செலுத்திக்கொண்டிருக்கும் நாம்—எப்படிச் சகித்திட முடியும்?

அக்கிரமத்துக்கு ஆலவட்டம் வீசுவதல்லவே, நம் பண்பு! நீதியும் நேர்மையும் தவறி, நெறிகெட்டோடும் ஓர் கொடுர ஆட்சியை, இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அனுமதித்தால், அதனை, எப்படிச் சகிப்பது. அதிலும், ஆச்சாரியார் ஆட்சியோ, சர்வாதிகாரக் கோலம் பூண்டு — தன் சொல்லே சட்டம் எனும் புதுப் பாதை வகுத்து— அதற்கு ஒத்துழைக்க சில 'அனுமார்களை'ப் பெற்று — நாட்டின் பெரும்பான்மையான மக்களை நலியச் செய்யும் முறைகளைப் பரவவிட்டு, நல்லதுக்கு வழி செய்யாமல், கேடு பயக்கும் திட்டங்களைத் தீட்டிக்கொண்டேயிருந்தால்— அந்தத் திட்டங்களை எடுத்துக் காட்டினது, விளக்கினாலும் கேளாது, 'விருப்பப்படி செய்வேன், நீ யார் கேட்க?' என்று வீண் பயமை கொண்டு திரிந்தால், பூத்து வரும் புது யுகத்தின் பிரஜைகளாம், இந்நாட்டு மக்கள், எப்படிச் சகிக்கமுடியும்? அதனைச் சகித்துக்கொண்டு, வாலிபர் முகாமாகிய தி. மு. கழகம், வாளாயிருக்கமுடியுமா? அதனாலேயே, அறப்போர்களைத் துவக்கினோம்— அதற்கான விளக்கத்தையும் நாட்டுக்கும் தந்தோம்—நாடு, ஏற்றது.

ஆனால், நாடாளும் ஆச்சாரியாரோ, மமதை கொண்டு, அதிகாரம் கையிலிருக்கிறது என்பதால், அட்டகாசங்களை ஏவினார்! தாக்கினார்! சுட்டார்! சிறைகளை நிரப்பினார்! அது போதாதென்று, தி. மு. க. தலைவர்களையும், சிறைக்குள்ளே போட்டு பூட்டிவிட்டார்.

தி. மு. க—வைப் பொறுத்தவரையில், சிறையென்பதோர் சிங்காரச் சோலையாகிவிட்டது.

அதிலும் அண்ணா அவர்கள் — அடிக்கடி, அதனை, 'வட்டமிட்டு' வந்தவர்களாவார்கள்.

ஆகவே, அவர்களை, மூன்று மாத காலம் தண்டித்தது குறித்து, அவமானமோ, வருத்தமோ, அடைய மாட்டார்கள்—அவர்கள்.

ஆனால் ஒன்று! நாட்டுப் பணியில் ஈடுபட்ட, இத்தகைய நற்பணியாளர்களைச் சிறையில் பூட்டுவது — எதிர்காலத்தில் ஆபத்தை, அழைப்பதையே ஒக்கும்.

இன்று அதிகாரம், இருக்கிறதென்னும் திமிரில், மக்கள் தலைவர்களைச் சிறையிலே பூட்டலாம் — ஏடாகூடங்களைச் செய்யலாம்.

ஆனால், நாளை! — அதனை, எண்ணிப்பார்க்க வேண்டும், ஆச்சாரியார். அவர், அமர்ந்திருக்கிற, சென்னைக் கோட்டையில் செங்கோலோச்சிய 'பலரை'—தேடினாலும், காண முடியவில்லை, இன்று. அவர்களாவது, தங்கள் ஆட்சிக் காலத்தில், நல்லாசனத்தில் அமர்ந்திருந்தார்கள். இன்று, ஆச்சாரியார் அமர்ந்திருப்பதோ, முள்சிம்மாசனம்—கீழேயோ, பெரிய படுகுழி, தயாராகயிருந்து கொண்டேயிருக்கிறது! இத்தகைய இக்கட்டிலிருக்கும்,' 'இவர்' நம் மீது, இவ்வளவு அஸ்திரங்களை வீசுகிறார்! நம்முடைய தலைவர்களையும், பூட்டிவிட்டார்!!

அக்கிரமம் நிரம்பிய சர்க்காரின் போக்கை எதிர்த்து, அறப்போரில் ஈடுபடும் வாய்ப்பும்—அப்படி ஏற்படுவதால் தியாகத் தழும்புகள் ஏற்படும் சந்தர்ப்பமும்—எல்லோருக்கும் கிடைத்துவிடாது; எப்போதும் கிடைத்துவிடாது.

ஆனால், அத்தகைய தியாகக் கட்டத்தைச் சந்திக்கும் வாய்ப்பை, ஆச்சாரியார், வழங்கியிருக்கிறார், தி. மு. க-வுக்கு.

தி. மு. க. வீரர்களின் கூடாரம்! அவர்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரியும் ஆர்வத்தீயினை, ஆயிரம் ஆச்சாரியாராலும், அணைத்துவிட முடியாது.

மூன்று மாதங்கள்!—நமது தலைவர்களை, நாம், காணமல், அதிகாரமெனும் அஸ்திரத்தைவீசி, தடுத்துவிட்டார் ஆச்சாரியார்.

அவரது ஆட்சிக்குட்பட்டிருக்கும், சிறைக்கதவுகள் பலமான

வைதான் — மதில்களும், மிகமிக உயரமானவைதான். ஆனால், அதற்குள் கொண்டு, மக்கள் தலைவர்களைப் பூட்டிவிடுவதால், அவர்கள் எந்த மகத்தான லட்சியத்துக்காகத் தம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறார்களோ, அந்த இலட்சியம் பட்டுவிடாது.

ரூபாய் 500 அபராதம்! இல்லாவிடில் மூன்று மாதம்!—நாட்டு மக்களின் உள்ளங்களில் வாழும், ஒரு கழகத்தலைவருக்கும், தளபதிகளுக்கும்.

இதுபோன்ற 'தண்டனைகள்' தான், அநீதியை எதிர்த்துப் போராடும் மாவீரர்களுக்குக் கிடைக்கும், பரிசுகளாகும்! இந்தப் பரிசினை வழங்க, எதேச்சாதிகார, ஆச்சாரியார் ஆட்சி, முன் வந்திருக்கிறது!!

ஆச்சாரியார், அகில உலக சரித்தைத அறிந்தவர்—அவர் தெரிந்து கொள்ளவேண்டும்—மக்கள் தலைவர்கள்மீது அடக்குமுறைகளைப் பாய்ச்சிய எந்தக் கொடுங்கோலனும், அதன் விளைவுகளை அனுபவிக்கத்தான் வேண்டும்.

அவ்விதம், கொடுமைபுரிந்தோரெல்லாம், இவ்வண்ணம், "மக்களைத் தூண்டினர்கள்" எனும் பொதுவான குற்றத்தைத்தான் சுமத்துவர்.

"தூண்டுமளவுக்கு செல்வாக்குள்ளோரின் சினத்தை, நாம் கிளறலாமோ?" என்று 'ஜார்' பாதையில் நடப்போருக்கு, ஆரம்பத்தில், விளங்குவதில்லை.

விளங்காத நிலையிலிருக்கிறார் அன்பர் ஆச்சாரியார்.

அதன் விளைவுதான், இந்த விபரீதங்களெல்லாம்.

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

விபரீதங்களைத் தாங்கித் தாங்கி நைந்துபோயிருக்கிறது, திராவிடம்—'மக்களைத் தூண்டினர்கள்'—என்று நம் தலைவர்களைச் சிறையில் பூட்டினர், அவர். ஆனால், அவர்கள் தூண்டாமலே, கோவில்பட்டியிலும் இடப்பாடியிலும், மக்கள் குமுறுகிறார்கள்! ஆச்சாரியாரின் ஆட்சியை எதிர்த்து அறப்போர் செய்யப் போவதாக நைந்தறி நெசவாளர்கள், அறிக்கை விட்டிருக்கிறார்கள்—மற்றோர் பக்கம் அவருடைய கொடுங்கோன்மை தாங்காத ஏழை மக்களின் கண்ணீர்க் கடல்! நடுவில் நிற்கிறார் ஆச்சாரியார்!!

மக்கள் சிந்தும் கண்ணீர், மலையையும் வீழ்த்திவிடும் — அதனை எச்சரிக்கிறோம், அவருக்கு.

தலைவர்களைச் சிறையிலே பூட்டிவிட்டீர்—புளகாங்கிதமும் அடைந்திருக்கலாம்

ஆனால், சிறைக்குள் நுழையும் போது, புன்னகை சிந்திச் சென்றனரே, அவர்கள், அதன் பொருளை நீர் அறிவீர்!

அந்தப் புன்னகைதான், எரிமலை—அதனைக் கவனத்தில் வைப்பீர்!—இலட்சிய வீரர்கள், அவ்விதம், புன்னகை புரிந்தவண்ணம், சிறைக்குச் செல்லச் செல்ல, அநீதிக்கு சாவு மணி அடிக்கப்படுகிறதென்று பொருள்.

ஆச்சாரியாரே, அதனை உணர்வீர்! — என்று எச்சரிப்பதோடு, தியாகத் தழும்புகளோடு சிறைக் கூடத்தில் உலவும் நம் சகோதரர்களுக்கு, நம்முடைய மரியாதைகளைத் தெரிவித்துக்கொள்வோம் — அவர்கள் உள்ளே! நாம் வெளியே!!

மகத்தான, நேரம்—இதனை, மனதில் எண்ணிப் பணிபுரிவோம்.

'எதையும் தாங்கும் இதயம் உண்டு!' இது அடிக்கடி நம்அண்ணா கூறும் சொல்.

'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?'—இப்படியும் பலமுறை கூறியிருக்கிறார். அவருடைய நல் லெண்ணத்தூதுவர்கள்தான் நாம! நமது கடமையைச் செய்வோம் — அவர்கள் வெளியில் வரும்வரை, நமது பணியினைத் தொடர்ந்துசெய்வோம். வாழ்க தி. மு. க.! வளர்க அதன் கொள்கைகள்!!

சிறப்புக் கூட்டம்

சி. வி. எம். அண்ணாமலை குழுவினர்களுக்கு வரவேற்பு

31—8—53 திங்கள் மாலை, பெரிய காஞ்சீபுரம் கிழண்டை இராச வீதியில், சண்முகம் நினைவு மன்றத்தார் சா்பாக, புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்து, அறப்போரிலீடுபட்டுச் சிறை சென்று திரும்பிய சி. வி. எம் அண்ணாமலை குழுவினர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. கூட்டத்திற்கு இரா. வெங்கடேசன் தலைமை வகித்தார். சண்முகம் நினைவு மன்றத்தினர் சார்பாக சிறை சென் தோழர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டு, மலர் மா கள் அணிவிக்கப்பட்டன. ப கிளைக் கழகங்கள் சார்பாகவும் சிறை சென்ற தோழர்களுக்கு மலர் மா கள் அணிவிக்கப்பட்டன.

அறப்போரில் பங்குகொண் ஆட்சியாளரின் தடியடித் தா ருக்கு இலக்கான தோழர் சவு டப்பன் அவர்களுக்கும் வரவே பளிக்கப்பட்டது

தோழர்களைப் பாராட்டி, தெய் சிகாமணி எம். எல். ஏ., இரா அரங்கண்ணல், சி. பி. சிற்ற கோவிந்தசாமி எம். எல். ஏ. ஆ யோர் பேசினர்.

அறப்போரில் பங்குகொண் சிறை சென்று மீண்ட, வடார் மாவட்ட தி. மு. க. செயலாளர் எல். சி- கிருஷ்ணசாமி, ஆச்சாரி ரின் அடாத போக்கினைக் குறி தும், தாயகத்திற்காகத் தியா தழும்பினை ஏற்க என்றும் தய என்றும் பேசினர்.

சிறை சென்று திரும்பிய தோ கள், சிறையின் சீர்கேட்டி குறித்தும், ஓர் இலட்சியத்த காகச் சிறை தண்டனை அனுப தது குறித்து மகிழ்ச்சி கொள்வ கவும், திராவிடத்தைத் தேய்க் வகையான திட்டங்களை எதிர் என்றும் போராடுவோம் என் திராவிடத்தைப் பெறும் வரை ஓயாது பணி புரிவோம் என் பேசினர்.

மகஜர்—ஏன்?

"ஆரம்பத்திலிருந்தே 'டால்மியாபுரம்' என்ற பெயர்தான் இருந்து வருகிறது"

என்று ரயில்வே மந்திரி தோழர் லால்பகதூர் சாஸ்திரி, தோழர் டி. கமலசாமி அவர்களின் கேள்விக்கு 2—9—53ல் டில்லி அரசாங்க சபையில் பதில் கூறியிருக்கிறார்.

டால்மியாபுரம் என்ற பெயர் எப்பொழுது ஏற்பட்டதென்பதல்ல இப்பொழுதுள்ள பிரச்னை. இந்தப் பெயர் கூடாது—மாற்றவேண்டும்—மாற்றப்படவேண்டும் என்பதே பிரச்னை! காரணம் தென்னாட்டிலுள்ள பூர்வீகப் பெயர் ஒன்றை இல்லாமல் செய்த கொடுமையையும், வடநாட்டிலிருந்து வியாபாரத்துக்காக வந்த ஒரு தனி மனிதனுடைய பெயரால் ஒரு வரை ஏற்படுத்திய ஆதிக்க அக்கிரமத்தையும் ஒழிக்கவேண்டுமென்பதாகவே இப்பொழுது திராவிடமுன்னேற்றக்கழகத்தாராகிய நாம் கிளர்ச்சி செய்து வருகிறோம். இந்தக் கிளர்ச்சியை ஒட்டியே தோழர் டி. கமலசாமி அவர்கள் கேள்வி கேட்டுள்ளார். ஆனல், பதிலளித்த ரயில் மந்திரி, கேட்கப்பட்ட கேள்விக்குச்சரியான நேரான பதில் கூருமல், 'டால்மியாபுரம் என்ற பெயர் எப்பொழுது ஏற்பட்டதென்பதற்குப் புள்ளிவிபரம் தருகிறார். அதோடு ரயில்வேக்காரர்கள் கையாளும் வழக்கமான சம்பிரதாயம் ஒன்றையும் விளக்கியிருக்கிறார்.

அதாவது, புதிதாக ஒரு ரயில்வே ஸ்டேஷனை ஏற்படுத்தும்போது, ரயில்வே அதிகாரிகள், சம்பந்தப்பட்ட ஜில்லாக் கலெக்டரிடம், அந்த இடத்துக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டு செய்வது வழக்கமாம். அந்தச் சம்பிரதாயப்படி திருச்சி ஜில்லாக் கலெக்டரைக் கேட்டு, அவருடைய சம்மதத்தின் பேரில்தான் டால்மியாபுரம் என்ற பெயரை ரயில்வேக்காரர் வைத்தனராம். இந்த விளக்கத்தோடு மேலும் ஒரு விளக்கத்தை ரயில் மந்திரி தந்துள்ளார்.

டால்மியாபுரம் என்ற பெயரே தங்களுக்குத் தேவை என்று அந்தப் பிரதேசத்துக் கிராமவாசிகள் ஒரு மகஜரை அனுப்பியிருந்தனராம். அதனல், அந்த இடத்துக்கு 'டால்மியாபுரம்' என்று பெயர் வைக்கப்பட்டதாம்.

கிராமவாசிகள் மகஜர் அனுப்பினர்—ஏன்?

விபரமும் சம்மதமும் கலெக்டர் தந்திருக்கும்போது, கிராமவாசிகளின் மகஜர் ஏன் தேவைப்பட்டது?

கலெக்டரிடமோ அல்லது டிப்டி கமிஷனரிடமோ தான் கேட்பது சம்பிரதாயம் என்ற முறையிருக்கும்போது, கிராமமக்களின் மகஜர் ஏன் தேவைப்பட்டது.

1938-ல் ஏற்படுத்தப்பட்ட அந்த ரயில்வே ஸ்டேஷனுக்குப் பெயர் வைக்கவேண்டுமென்ற முயற்சி நடைபெற்றபோதே, அதற்கு எதிர்ப்பு இருந்திருக்கிறதென்பது ரயில் மந்திரி தந்துள்ள விளக்கங்களிலிருந்து நன்கு தெளிவாகிறது.

டால்மியா என்ற வடநாட்டு வியாபாரி, தன்னுடைய பெயரால் அந்த ஸ்டேஷன் அமையவேண்டுமென்று விரும்பியதாலேயே, கிராமவாசிகளிடம் கையெழுத்து வாங்கி மகஜர் அனுப்பி இருக்கிறார் என்பது வெட்டவெளிச்சமாகத் தெரிவதோடு, டால்மியாபுரம் என்ற பெயரால் ஒரு ஸ்டேஷன் அமைவதை அப்பொழுதே எதிர்த்திருக்கிறார்கள் என்பதும் நன்கு புலனாகிறது. எதிர்ப்பு இல்லை என்றால், கிராமவாசிகளின் கையெழுத்திட்ட மகஜர் ஏன் தேவைப்பட்டது? யோசித்துப் பார்க்கவேண்டாமா?

மற்ற ரயில்வே ஸ்டேஷன்களுக்குப் பெயர் வைத்த பொழுதெல்லாம், கலெக்டரின் சம்மதத்தோடு, கிராமவாசிகளின் மகஜரும்தேவைப்பட்டதா? இல்லையென்றால், கல்லக்குடியை டால்மியாபுரமாக்குவதற்கு மட்டும் ஏன் கிராமவாசிகளின் மகஜர் தேவைப்பட்டது? ஏன் கலெக்டரின் சம்மதம் ஒன்றோடு மட்டும் அந்தப் பெயர் வைக்கப்படவில்லை.

எனவே, நம்முடைய எதிர்ப்புக் கிளர்ச்சியை ஏளனக் கண்களோடு நோக்கும் எதிர்க்கட்சியினர் இதனை யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம். நம்முடைய நியாயமான கோரிக்கையை அடக்கு முறையால் நசுக்கிவிடலாம் என்று கருதிக்கொண்டிருக்கும் ஆச்சாரி சர்க்கார், நேரு சர்க்காருக்கு உண்மை நிலையை விளக்கி, டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக்கும் காரியத்தை உடனடியாகச் செய்யும்படி வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

ரயில்வே மந்திரியின் பதில், நம்முடைய கிளர்ச்சியை மேலும் வலுவடையச் செய்கிறதென்பதைச் சென்னை சர்க்கார் உணர்ந்து ஆவன செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

கல்லக்குடியைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்பதற்காகவே கருணாநிதி சிறையில் 'தவம்' கிடக்கிறார். அவரும் அவருடன் சிறையில் வதையும் நம்முடைய தோழர்களும் வெளியேவருமுன் டால்மியாபுரம் கல்லக்குடியாக வேண்டும். இல்லையேல், மேலும் பல கருணாநிதிகள் சிறைக்கூடத்தை நிரப்பத் தயாராய் இருக்கிறார்களென்பதைச் சர்க்காருக்கு நினைவூட்டுகிறோம்.

★

எப்படி ஒப்புவது?

"ஒருவருக்கொருவர் அன்றாட வயிற்றுப் பிழைப்புக்காகச் சண்டை செய்துகொண்டும், இதுபோன்ற மற்றக் காரியங்களுக்காக ஒரு தேசத்தை மற்றொரு தேசம் அடிமைப்படுத்த யுத்தங்கள் செய்வதுமான காரியங்கள் உலகமெங்கும் நிகழ்ந்து கொண்டும் இருக்கும்பொழுது, கடவுள் நமது பிதா என்பதையும், நாமெல்லோரும் அவருடைய மக்களான சகோதரர்கள் என்பதையும் என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை"

—ஜார்ஜ்லான்ஸ்பரி.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 6—9—53 [ஞாயிறு

கல்லக்குடி — 50-வது நாள்!

★

படுகொலை
குண்டுமாரி
இருவர், பிணம்!
பலருக்கு, காயம்.
தடியடி! கைது!!
நூற்றுக்கணக்கில்,
சிறைக்குள்.

*

திராவிட மண்ணில், சிந்தை நோகும், இக்கொடூரக் காட்சிகள், நடைபெற்று 50-நாட்கள் ஆகிவிட்டன. இத்தனைக் கொடுமைகளைப் பற்றி, சின்னஞ் சிறு சொல்கூடச் செப்பவில்லை, பண்டித நேரு. அவர், அகில உலக ஜோதியாம்! மக்கள் குறை தீர்க்கும் மாணிக்கமாம்!! — ஆனால், தென்னாட்டில் நிகழ்ந்த ஒரு நாள் கொடூரத்தைப்பற்றி, ஒரு தகவல் கேட்கவில்லை — உறுதிமொழி தரவில்லை. ஜூலை 15-ந்தேதி, துவங்கிய 'கல்லக்குடி அறப்போர்' தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. டில்லி ஆதிக்கத்தின் முகத்தில் கரிபூசுவதுபோல, 'டால்மியாபுரம்' எனும் பெயர், எந்த இடத்திலும் இல்லாமற் செய்துவிட்டார்கள். இந்தக் காரியம், 'டில்லிக்குச் சொந்தம்' என்று கூறப்படும், ரயில் நிலையத்தில்தான், நடைபெறுகிறது! ஆனால், இவ்விதம் ஓர் அறப்போர் நடைபெறுவதாகக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை, பண்டித நேரு—பக்கத்திலிருக்கும் வெளிநாட்டுத் தூதர்கள் கேலிசெய்வர் எனும் கிலிபோலும்! பார்லிமெண்டிலும், இதுகுறித்து, எதுவும் கூறவில்லை. இதைக்கண்டு— 25-க்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், ரயில் மந்திரி லால்பகதூர் சாஸ்திரியிடம், 'கல்லக்குடி அறப்போர்' குறித்து, மகஜர் ஒன்று அனுப்பினர் — மிகவும் மரியாதையுடன் அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர், 'எங்களை அழைத்து எங்களுடன் விவாதிக்கவேண்டுமென்று கூட அவசியமில்லை. தாங்களே, பெயரினை மாற்றிவிட்டு, தெரிவித்தால் போதும்' என்பதாக. லால்பகதூர், பதிலளித்ததாகத் தெரியவில்லை! ஆனால், கடந்த 2-ந்தேதி, பார்லிமெண்டில் தோழர் கமலஸ்வாமி, பிரேரபணை ஒன்றைப்பிரேபித்திருக்கிறார். அதற்குப் பதிலளிக்கும்போது, 'டால்மியாபுரம் என்ற பெயர், ஸ்டேஷன் வைக்கப்பட்டது முதல் இருந்துவந்திருப்பதாகவும், 'கல்லக்குடி' என்று இருந்ததை மாற்றவில்லை' என்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

டில்லியினர், மாற்றினரா — இல்லையா, என்பதல்ல பிரச்னை.

'டால்மியாவின் பெயர்' வேண்டாம்—கல்லக்குடியாக மாற்று! என்பதே, மக்களின் முழக்கமாகும்.

இவ்விதம் தீர்மானம்நிறைவேற்றி இதே ரயில்வே மந்திரிக்கு அனுப்பித்து, ஓராண்டுக்குமேல் ஆகப்போகிறது — திருச்சி மாவட்டக் கழகம் தீர்மானம் அனுப்பியபின், சுற்று வட்டாரத்திலிருக்கிற பஞ்சாயத்து போர்டுகள் எல்லாம் அவ்விதம் தீர்மானம்போட்டு, டில்லிக்கு அனுப்பின. மாநாடுகள் மூலமும், நாம், பலமுறைக் கேட்டோம். டில்லித் தர்பார், பதிலளிக்கவில்லை! அலட்சியப்படுத்திற்று!!

அதனால்தான், பலமுறை எச்சரித்தும் பயனேற்படாததால், "கல்லக்குடி அறப் போராட்டத்தை" ஆரம்பித்தோம். அதன் நோக்கம், தமிழ் கொழிக்கும் பூமியில், வடநாட்டுப் பணமுதலையின் பெயர் கூடாது என்பதேயாகும். இது சின்னஞ் சிறு கோரிக்கைதான்—ஆனால், இதனை ஏற்க டில்லி, தயாராயில்லை. காரணம் டால்மியா வடநாட்டு அதிபதி! பத்திரிகைவளம் மிக்க பணக்காரர்!! அரசாங்கம் யாரைமதிக்கும்! மக்களின் குரலையா! மகாபிரபுவின் வார்த்தையையா!! — அதனால் எத்தகவலும் கிடைக்கவில்லை. எனவே, அறப்போர் துவக்கினோம்—அதற்குமுன் திருச்சி மாவட்ட மக்களின் கருத்தைத் திரட்டினோம் — எம். எல். ஏ.க்கள் பலரின் ஆதரவும் கிடைத்தது—அனைவரும் ஒப்பினர். அதன் பிறகும் வேண்டுகோள் அனுப்பியும்பதில்வராமற்போகவே, அமைதியான முறையில், தோழர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் அறப்போர் துவக்கினோம்—இவ்வளவு தூரம், பெயர் மாற்றக் கோரிக்கை வளர்ந்தும், சிறு பதில் கூடத்தரவில்லை, டில்லி—இந்த லட்சணத்தில் ரயில்வே இலாகாவுக்கு உதவி மந்திரி தென்னாட்டு அழகேசன்! மக்களின் கோரிக்கைக்கு, சிறு பதில் அனுப்பும், 'சிரமத்தை'க்கூட எடுக்க விரும்பாத ரயில்வே இலாகாவின் ஆண்டு வருமானம் சுமார் 270 கோடி ரூபாய். இவ்வளவு பணத்தையும், இந்த மந்திரிகளை நம்பியே, கொடுக்க வேண்டியிருக்கிறது! அப்படிக் கொடுக்கிற பணத்தையாவது, ஒழுங்காகச் செலவழிக்கிறார்களா என்றால், அதுமில்லை — மக்களின் கோரிக்கைக்கு சிறுபதிலையும் தெரிவிக்க விரும்பாத இலாகாவில் எப்படியிருக்கும், நிர்வாகம்! காரக்பூர் எனும் ஊரிலிருந்த ரயில்வே ஸ்டோர்ஸிலிருந்து சுமார் ரூ. 6250-க்கு, மலேரியா நிவாரண மாத்திரை காணாமற் போயிற்றாம்! இரு தினங்களுக்குமுன், பார்லிமெண்டில், பதில் தரப்பட்டது. இத்தகைய இடத்துக்குத்தான், நாம் செலுத்தும் பணம் போய்க்கொண்டிருக்கிறது — பணமும் நாசம்! ஏதாவது கோரிக்கை அனுப்பினால், மானமும் பறிபோகிறது!! இத்தகைய டில்லியோடுதான் நாம் தொடர்புகொண்டு, இணைந்து வாழ வேண்டுமென்று கூறப்படுகிறது. நம்மிடமிருந்து பணத்தைச் சுரண்டிச் செல்லும் வடவர்கள், வஞ்சகத்தோடு காரியமாற்றுவதை, பன்முறை குறிப்பிட்டு வந்துள்ளோம். வஞ்சகம்—சூதுமதி இல்லையென்றால்—நாம் இவ்வளவு தூரம்,

காரியும் பதில் வராமலிருக்குமா! பார்லிமெண்டு உறுப்பினர்கள் மகஜர் அனுப்பியதும் — அவர்களை அழைத்து முழுவிபரமும் கேட்டு விவாதமாவது நடக்காமலிருந்திருக்குமா! ஆகவே, 'கல்லக்குடி' அறப்போர் குறித்து, தன்னுடைய ஆதிக்கத் திமிரை, ஸ்தாபிக்கவே, வடவர் முனைகின்றனர். அதன் அறிகுறியாகத்தான், முன்பு, நாம் தீர்மானங்கள் அனுப்பியபோதெல்லாம், மவுனம் சாதித்தனர். இப்போது, தொடர்ந்து அறப்போர் நடைபெறுவதால், விளக்கம் தரவேண்டிய கட்டம் வந்திருக்கிறது, சாஸ்திரிக்கு. வடவர் ஆதிக்கம், ஓர் வணங்கா முடியாகயிருக்கவே, விரும்பும். அது, சிரம்தாழ்த்தி, நம் கருத்தை ஏற்க வேண்டுமாயின், தொடர்ந்து நம் அறப்போர், நடைபெறவேண்டும். அப்போதுதான், டில்லி தர்பாரின், கிலி, உலகத்துக்குத் தெரியும்.

'கல்லக்குடி அறப்போர்' குறித்து முயற்சி எடுத்துக்கொண்ட பார்லிமெண்டு உறுப்பினர்களைப்பாராட்டுகிறோம். அதோடு கடந்த 50 நாட்களாக—இடையறாது—கஷ்ட நஷ்டங்களைத் தாங்கியவண்ணம்-அறப்போரிலீடுபட்டுவரும், கல்லக்குடி அறப்போர் வீரர்களையும் வாழ்த்துகிறோம்!

★ அந்தக் கடிதம்! ★

பாராட்டுக் கடிதம், கிடைத்திருக்கிறது, பாராளும் பாக்யசாலிக்கு.

'தினமணி' இதழுக்குக் கொடுத்து, அந்தப் பாராட்டை, வெளியுலகுக்கு விளம்பரப்படுத்தியிருக்கிறார், அவர்.

“பாராட்டுப்பாரீர், மாணிடர்காள்! ஆட்சியை நடத்தும் எனக்கு, பக்கமிருக்கும் செல்வாக்கிற்கு, இதோ ஓர், எடுத்துக் காட்டு”, என்று தெரிவிப்பதுபோல, கடிதத்தை, வெளியிட்டிருக்கிறார்.

அரசியல் காரணமாக, வேற்றுமை கொண்ட இருபெரும் தலைவர்களுக்கிடையே நடைபெறும் கடிதங்களையே, பத்திரிகைக்குத் தருவார்கள்! மக்களும் அறிவார்கள்!!

இந்தக் கடிதம், அரசியல் மேதை தீட்டியதல்ல—ஒரு அம்மையார், எழுதியது. அதிலுள்ள விஷயமும், அரசியல் விவகாரங்களைப் பற்றியதல்ல — ஆச்சாரியாரின் புகழைப் பாடுவது!

அது, ஆச்சாரியார் அவர்களாலேயே, பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டு, விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறது. கடிதம், சாதாரணமானதல்ல—பாராட்டுக் கடிதம்! எனவே, அதற்கு, அவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது!!

*

“கொரியாவுக்குப் போகிறீர்கள். வீரர்காள்! அங்கே, பெண்கள் உண்டு. அவர்களைக் கண்டு மயங்கிவிடாதீர்கள்.” என்று அண்மையில் கொரியாவுக்குப் புறப்பட்டுச் சென்ற 5000 வீரர்களுக்கு, விடைகொடுத்து அனுப்பியபோது, அன்பர் ஆச்சாரியார், 'வாழ்த்துரை' வழங்கினாரல்லவா? அதைக் கண்டு, அவ்வீரர்களில் ஒருவரது மனைவியார், உளமகிழ்ந்தும் — அதே நேரத்தில் உள்ளக் குறைவோடும்— மேற்படி கடிதத்தை, முதலமைச்சருக்கு, தீட்டியிருக்கிறாராம். “மாதர்கள்பால்மையல்கொள்ளாதீர்! என்று தாங்கள் வழங்கிய அறிவு கண்டு மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் அதோடு, தாங்கள் இன்னொரு புத்திமதியும், கூறியிருக்க வேண்டும்— ராணுவ வீரர்களுக்கு மதுபானம் நிறைய வழங்கப்படுகிறதல்லவா? அவர்கள், தலைகால், தெரியாமல் குடித்துவிட்டு கோணங்கிக் கூத்தாடுகிறார்கள். அப்படியெல்லாம் செய்யக் கூடாது என்று அவர்களுக்கு தாங்கள்புத்திமதி, கூறியிருக்க வேண்டும்!”, என்ற கருத்தில், அம்மையார், தீட்டியிருக்கிறார். அதில், குடிகாரக் கணவன் செய்யும் கொடுமைகளையும், விளக்கியிருக்கிறாராம். உண்மை — குடிகாரனைக் கணவனாகப் பெற்றோர், குரங்கு கைப் பூமாலையெனச் சிக்கிச் சீரழிவதை எல்லோரும் அறிவர். அதனாற்றான், மதுவிலக்கு அமுலுக்கு வருவதை, மகிழ்ந்து, வரவேற்றனர். ஆனால், ராணுவ வீரர்கள் மட்டும் மது அருந்தலாம்! எனும் முறை இன்னும், நீடித்து வருகிறது. இந்தக் கேட்டைக் குறிப்பால் உணர்த்தவோ அல்லது தன் போன்ற பெண்கள் படும் துயர்களை விளக்கவோ, அம்மையார், கடிதம் தீட்டியிருக்கலாம்.

ஆனால், 'ஆதரவு ஆதரவு!' என்று தேடியலையும் அன்பர் ஆச்சாரியாருக்கு, அக்கடிதம் ஒரு பாராட்டுக் கடிதம்போல், காட்சியளித்தது போலும். சிறு குறிப்பு எழுதி தினஏடுகளுக்கு, அனுப்பியிருக்கிறார்— “மாதர்கள்மீது மையல் கொள்ளாதீர்கள்!” என்று ஆச்சாரியாரின் திருவாயிலிருந்து சிறுசொல் சிதறப்பட்டுவிட்டால், இகலோக ஆசாபாசங்களில் உழலும் ஆன்மாக்களெல்லாம், அவ்வண்ணமேசெய்துவிடவா, போகின்றன! ஆச்சாரியாருக்கு முன்னிருந்த ஆயிரமாயிரம் ரிஷீசுரர்களும், மாமுனிகளும், கூறியும் மனித குலத்தில், காணமுடியாததை இவரது ஒருநாள் சொற்பொழிவு, உருவாக்கிவிடவா முடியும்? ஒருக்காலும் முடியாது! 'பிறர் மனை புகுதல்-பெரும் பிழை” இவ்வண்ணம் புத்திமதி கூறுவதும், பிறரை அப்புத்திமதியை ஏற்று நடக்குமாறு, வலியுறுத்துவதும், மிக மிகத் தேவை. ஆனால், அங்ஙனம், ஒருமுறை சொல்லிவிட்டால் உடனே எல்லோரும் திருந்திடுவர்—ஏனெனில் என்னுடைய வாக்கில் தெய்வாம்சம் இருப்பதாக மக்கள் கருதுகிறார்கள் எனும் “முடிவு”க்கு வரும் முதலமைச்சரைப்பற்றி என்ன கருத முடியும்?

மாதர்களை நாடேல்! — ஆச்சாரியார், வழங்கினர், இந்தப் புத்திமதியை.

அதைக்கேட்ட அம்மையார், மது வைத் தொடாதீர்!'—என்ற புத்தியை உபதேசிக்காததேன், என்று கேட்கிறார்.

உடனே "பார்த்தீர்களா? என் வார்த்தைக்கு நாட்டிலிருக்கும் செல்வாக்கை இந்த அம்மையார், எவ்வளவு உருக்கமுடன் கடிதம் தீட்டுகிறார். இது என் வார்த்தைக்கு மக்களிடம் இருக்கும், மதிப்பையன்றோ காட்டுகிறது?" என்று குதூகலமுடன் கூறிக்கொள்வதைக் கண்டு என்னவென்று சொல்வது!

புத்திமதி கூறிய தன்னைப்பாராட்டிக் கடிதம் வந்திருப்பதாக நாட்டு மக்களுக்குக் காட்டிக்கொள்கிறார் ஆச்சாரியார்.

இத்தனைநாளாக அரசியல்வாழ்வில் ஈடுபட்ட ஒருவருக்கு, பாராட்டுக்கடிதங்கள் வருவதும் போவதும், ஆச்சரியத்துக்குரிய விஷயமல்ல.

ஆனால், இந்த ஒரு கடிதத்துக்கு, இவ்வளவு மதிப்பும் சிரத்தையும் காட்டி, எல்லோர் முன்னிலையிலும் வைக்கவேண்டிய அவசியம் என்ன?

அயோக்யன் என்று ஊர் தூற்றும் ஒருவனுக்கு, 'யோக்யன்' என்றோர் சொல் யாரிடமிருந்தாவது கிடைத்துவிட்டால், அதை எல்லோரிடமும் காட்டிய வண்ணம், தான் பெற்ற கெட்ட பெயரைத் துடைக்க முயல்வது, சகஜம்.

அந்த 'சகஜப்பாதை'க்கு சாமத்தையும் ருக்கு வையும் அதர்வணத்தையும் யஜுரையும் கரைத்துக் குடித்திருப்பதாகக் கூறிடும் ஆச்சாரியார், சொல்லவேண்டிய காரணம், என்ன?

ஒரு கடிதம்! — அதற்கு, இவ்வளவு முக்கியத்துவம், கொடுக்கவேண்டிய அவசியம்?

அதனை நண்பர் குழாத்துக்குப் படித்துக் காட்டி பரவசமடையலாம்; ஆனால், அவர் நாட்டுமக்களுக்கு வெளிப்படுத்தவேண்டிய அவசியம்?

எது, அந்த அவசியம், என்பதை தோழர்களின் சிந்தனைக்கே, விட்டுவிடுகிறோம்.

ஒரு மாபெரும் தலைவர், தனக்குக் கிடைக்கும் ஓரிரு பாராட்டுக் கடிதங்களைக் காட்டி, மக்கள் மன்றத்தில் தனக்கிருக்கும் செல்வாக்கை காட்டிக்கொள்ள முயல்வது — நமக்கே, துக்கமாயிருக்கிறது! இக்கதிக்கு ஆளான அவர்மீது, பரிதாபமும், உண்டாகிறது!!

எவ்வளவு, உன்னத நிலையிலிருக்க வேண்டியவர்—இன்று, எத்தகைய 'வேட்டை'யிலீடுபடவேண்டியவரானார்.

"எங்கே, அவர்? எங்கே அவர்?" என்று மக்கள் தேடவேண்டிய அளவுக்கு, பணியும் வயதும், மிக்கவர்.

"எங்கே, மக்கள்? எங்கே மக்கள்?" என்று மக்களைத்தேடி அலையவேண்டிய, அவதிக்கு ஆளாகி, அலைகிறார்.

அதனால்தான், அவரது கூடாரத்தில், ஏனோதானோக்கள், கொட்டமடிக்கிறார்கள் — இருக்கவேண்டியவர்கள், இல்லை—எதெதுவோ, அவருக்குப் பலம்திரட்டப் புறப்படுகின்றன—யார், 'ராஜாஜிக்கு ஜே!' என்று கூவி ஆனந்தமடையவேண்டுமோ அவர்கள் இல்லை—'ராஜாஜிக்கு,ஜே!' என்று கூவி, யார், லாப வேட்டையாட முயல்கிறார்களோ அவர்கள் பவனிவருகிறார்கள்—காங்கிரஸ்காரர்கள் இல்லை!-நாட்டுப் பற்றுக் கொண்டோர் இல்லை—கனி பழுத்த மரம்தேடிடும் அரசியல் 'வௌவால்'கள் வட்டமிடும் இடமாகிவிட்டது. ஆச்சாரியார் 'இல்லம்' —ஆம்! இதனை, நாம், தெரிவிக்கவில்லை. இதோ, காங்கிரஸ், ஏடு, 'பேரிகை' எனும் இதழ், கூறுகிறது:

"ராஜாஜி மந்திரிசபை இப்படி அலைமோதி, ஆதரவுக்காக அலைவதைக் காணப் பரிதாபப்படுகிறோம். உழைப்பாளர் கட்சி, லீக், காமன்வீல், மற்றும் ஊர்ப்பேர் தெரியாத உதிரி சுயேச்சைகள் முதலியோரிடம்போய் பல்லைக் காட்டுவதற்குப் பதிலாக காங்கிரஸ்காரர்களிடையே வாருங்களெனக் கூறுகிறோம்...கூலிக்கு மாரடிக்கிற கோஷ்டியார்தான் பஜனைக்கோஷ்டியில் சேரமுடியுமே தவிர, உண்மையான கொள்கையும், தொண்டுமுள்ளவர்கள், இவர்களை ஏறிட்டும், பார்க்கமாட்டார்கள்."

கூலிக்கு மாரடிக்கிற கோஷ்டி!— குறிப்பிடுகிறது, இந்த ஏடு.

யார்? — ஆச்சாரியாரின், கூடாரத்தை வட்டமிடுபவர்கள்.

கூலி, எது?—'கல்கி' இதனையும் 'கனம்' மாணிக்கவேலரையுமே கேட்டு விளக்கம் பெறவேண்டும்.

பாராட்டுக் கடிதம்! பத்திரிகைகளின் பக்கபலம்! பஜனைக்கு ஒரு கோஷ்டி! — இந்த வயதில், இவைகளைத் தேடத்தானா, ஆச்சாரியாரின் அறிவும் திறனும், பயன்படவேண்டும்?

ஆதரவுக் கடிதத்தைக் காட்டுகிறார், ஆச்சாரியார்.

ஆனால், அவருக்கு, தீட்டப்படாமலிருக்கும் கடிதங்கள், எத்தனை எத்தனை.

தன்னுடைய வார்த்தைக்கிருக்கும் 'மதிப்பை' அளவிடும் 'கோல்' எனக் கருதுகிறார், அக்கடிதத்தை.

ஆனால், அவருடைய ஆட்சியின் அலங்கோலங்களை அளவிடும் 'கோல்' போல, நாடே கிடக்கிறது.

அம்மையார், கடிதம், தீட்டினார்கள்.

ஆனால், நாட்டால், ஏடு எழுத இயலாதே.

'தங்கள் பெருமை, பெரிது!'— இது, பாராட்டுக் கடிதம்.

'அடபாவி!'—இந்தக் குரல், ஆச்சாரியாரின் ஆட்சி குறித்து எழும்பாத, இடம் உண்டா?

பாராட்டுக்கடிதம், காட்டுகிறாரே பாக்யசாலி—இதோ, ஓர், கடிதம், தீட்டியது, ஓர், துர்ப்பாக்கியசாலி

"நானும் என் மனைவியும் இரு குழந்தைகளும் தற்கொலை செய்து கொள்ளுகிறோம். விஷம் கலந்த தின்பண்டங்களை அவர்களுக்குக் கொடுத்துத் தின்னச்சொன்னேன். தின்றார்கள்—இதோ, என் கண்ணெதிரில், செத்துக்கொண்டிருக்கிறார்கள். நானும், சாப்பிட்டுவிட்டேன். நானும் செத்துக் கொண்டிருக்கிறேன். எங்கள் சாவுக்கு யாரும், காரணமில்லை — நாங்களேதான். இந்த நாட்டில் வாழ அலைந்தேன்—ஒரு வேலையும் கிடைக்கவில்லை. மானமிழந்தேன்! உயிரையும் இழக்கிறேன்!!"

மதுரையில், ராமய்யர் என்பவர் இவ்வண்ணம் ஓர் கடிதத்தை, சர்க்கார் அதிகாரிகளுக்கு எழு

நிபுணர் கமிட்டியில்—நாம்...!

இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் நிபுணர் கமிட்டியை யார்தேர்ந்தெடுத்ததென்பதற்கே விளக்கம் தரப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க, நியமிக்கப்பட்டிருக்கும் நிபுணர் கமிட்டியில் இடம் பெற்றிருப்பவர்களில் இருவர், இந்த ஆரம்பக் கல்வித் திட்டம் அமுலில்இருக்கும் பகுதிக்குச் சம்பந்தமில்லாதவர்கள்—வடநாட்டவர்கள்—அங்கே இந்த ஆரம்பக் கல்வித் திட்டம் அமுலில் கிடையாது — எனவே, அவர்களுக்கு இந்தத்திட்டத்தைப் பற்றிய நுணுக்கங்கள் எதுவும் தெரியமுடியாது — தெரியக் காரணமோ அவசியமோ இல்லை.

இந்த நிலையில் உள்ள இருவரில் ஒருவர்தான் நிபுணர் கமிட்டிக்குத் தலைவராம்.

*

இந்த ஆரம்பக் கல்வித்திட்டமோ புதிது. இதுவரை அதாவது உலகந்தோன்றி, மக்களின் நடமாட்டம் ஏற்பட்ட காலத்திலிருந்து இந்த 1953ம் ஆண்டுவரையிலும், யாரும் இப்படி ஒரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முயற்சிக்கவில்லை.

மனுவின் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஜாதிகளின் காரணமாக, ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு தொழில் வகுக்கப்பட்டதைத்தவிர, சட்ட பூர்வமாக—ஜனநாயக முறைப்படி நாட்டைஆளும் எந்தஅரசாங்கமும் இப்படி ஒரு திட்டத்தை அமுலாக்க இதுவரை முயன்றதேயில்லை.

எந்த ஒரு அரசாங்கமும் உழவுத் தொழிலையோ, க்ஷவரத் தொழிலையோ, அல்லது வேறு எந்தத் தொழிலையுமோ கற்றுக்கொடுத்து பரீட்சையில் தேறவைக்கும் திருப்பணியில் இதுவரை ஈடுபட்டதே இல்லை.

*

இன்ன காலத்தில் உழவுத் தொழிலை இன்ன அரசாங்கம் கற்றுக்கொடுத்தது.

அதற்கு முன் இந்தத் தொழில் இந்த நாட்டில் இருந்ததில்லை.

இன்ன ஆண்டில் இன்ன இராஜா நாட்டை ஆண்டபோதுதான், நாட்டவர்க்கு நகைசெய்யும் தொழிலை நல்லெண்ணத்துடன் கற்றுக் கொடுத்தார்.

அதற்குமுன் நகை என்ற சொல்லே இருந்ததில்லை — அதனை செய்யும் தொழிலாளியும் இருந்ததில்லை.

மண்ணைக்கொண்டு பாண்டங்கள் செய்யும் முறையை அந்த அரசாங்கம் கற்றுக்கொடுக்கவில்லை என்றால், இன்று நாம் பட்டினியாக இருக்க வேண்டியதுதான்.

உழவனிருந்தும் குயவன் இல்லையென்றால் கும்பி காயவேண்டியது தானே!

உழவனை உண்டாக்கிய காலத்துக்கும் குயவனை உண்டாக்கிய காலத்துக்கும் இடைக்காலத்தில் இருந்த மக்கள், உழுது பயிரிட்டும் பெற்ற அரிசியைச் சமைத்துச் சாப்பிடவும் வழியின்றிப் பானைசட்டி இல்லாமல் பாதவித்தார்கள்.

இப்படிப்பட்ட ஒரு பரிதாப நிலையைக்கண்ட அரசாங்கம், சாப்பிடுவதற்கென்று உண்டாக்கப்பட்ட அரிசியைச் சமைப்பதற்கு என்ன வழியைக் கண்டுபிடிப்பதென்று செய்யப்பட்ட ஆராய்ச்சியின் பயனாகப்பானைசட்டிகளும் அதனைச் செய்வோரும் உண்டாயினர் என்று இப்படி ஒரு பட்டியலையாவது, புதிய கல்வித்திட்டத்தை அமுலாக்கும் ஆச்சாரியார் தயாரித்துக் காட்டமுடியுமா?

ஆரம்பக் கல்வித் திட்டத்தை புகுத்திய ஆரம்ப நோக்கமே, அவரவர் குலத்தொழிலை அவரவர் செய்ய வேண்டும் என்பதுதான். அதற்காகவேதான் ஆச்சாரியார் அந்த திட்டத்தை அமுலாக்க முன்வந்தார். காரணம் மனுவின் கால ஏற்பாடுகளில் ஒன்றான குலத்தொழில்முறை வரவரக் குறைந்து, அவரவர்களும் தங்களிஷ்டப்படி, தங்களுக்குத் தெரிந்த தொழிலைச் செய்யக் கற்றுக் கொண்டு விட்டதுதான். ஆச்சாரியாருக்கு இது பிடிக்கவில்லை. ஆச்சாரியாருக்கு இது பிடிக்கவில்லையென்றால், அவருடைய இனத்துக்கு இது மிகவும் பாதகம் விளைவிப்பதாக இருக்கிறது என்று பொருள். எனவேதான், வர்ணாஸ்ரமமுறை இந்த நாட்டில் நிலைபெற்றாலன்றி, தம்மவரின் வாழ்க்கைசரிவராதலங்காதென்பதை உணர்ந்த ஆச்சாரியார், தம்முடைய பதவியைத் துணையாக வைத்து இந்தக் காரியத்தை சாதித்து விடலாம் என்று கருதினார் அவருடைய எண்ணம் ஈடேற முடியாதபடி பல முனைகளிலிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பவே, தம்முடைய 'பாலிசி'யை மாற்றிக் கொண்டு, இப்பொழுது இந்த நிபுணர் கமிட்டியை அமைத்திருக்கிறார்.

நியமிக்கப்பட்ட நிபுணர் கமிட்டி தலைவரோ, நாட்டுக்கும், திட்டத்துக்கும் புதியவர்.

இன்னொருவரோ, அவரும் வடநாட்டவர்தான் என்பது ஒருபுறமிருக்க, இந்தத் திட்டம் இந்த வர்ணாஸ்ரமுறையை நிலை நாட்டத்தான கொண்டுவரப்படுகிறது என்பதை அறிய முடியாத வேற்று ஜாதியினரான முஸ்லீம் தோழர்.

இன்னொருவரும், இந்து சமயக் கொள்கைகளை அறிந்து கொள்ளவும், அதற்கேற்ப, காரியங்களைச் செய்ய வேண்டிய அவசியத்திலு

வைத்து விட்டு, பிணமாகியிருக்கிறார்—குடும்பத்தோடு.

தன் வார்த்தைக்கு இருக்கும் 'தேவாம்சத்தை', மக்களுக்கு விளக்க விரும்புகிறார், ஆச்சாரியார். அவருடைய ஆட்சியில் நடக்கும் 'அக்கிரம சாக்காடுகளை' மதுரைக் கடிதம், உலகுக்குக் கூறுகிறது.

மதுரைக் கடிதம்மட்டுமா!—நாட்டின் கருத்துக்களை அறிய ஆச்சாரியார் கடிதம் கோரினால், எவ்வளவோ, குவியும்!! அவருடைய 'பூத' உடலை மறைத்து 'உள்ளே இருக்கும் மூச்சைத்' தடுத்து 'சாயுச்ய பதவி'க்கு 'ஒரு நிமிடத்தில்' வழிகாட்டுமளவுக்கு, அவரை மூடி, இந்த உலகுக்குத் தெரியாமல் செய்யுமளவுக்கு, கடிதங்கள் குவியும்! பாராட்டுக் கடிதம் காட்டும், 'பாக்யசாலி' இதனை அறியவேண்டும்!!—கடிதமல்ல, பெரிது — தயாரிப்பதும்எளிது. கருத்துக் குருடாகாமல் கவலைப்படும் மக்களின் நல்வாழ்வில், அக்கறை காட்ட வேண்டும். அப்போது, ஆதரவு வேட்டைக்கு அலையவேண்டிய அவசியமும் இல்லை! அதற்காகத் தின்டாடவேண்டிய நிர்ப்பந்தமும் இல்லை!!

❁

மில்லாத கிருஸ்தவ ஜாதியைச் சேர்ந்தவர்.

கடைசியாக வருபவரோ, இந்த ஆரம்பக் கல்வித் திட்டத்தை எப்படியாவது ஆதரித்துத் தீர வேண்டிய நிர்ப்பந்தத்திலிருப்பவர்— —ஆச்சாரியார் சர்க்கார் சிப்பந்திகளில் ஒருவர்.

இப்படிப்பட்ட ஒன்றுக்கொன்று பொருத்தமற்ற கொள்கைகளோடு கூடிய வெவ்வேறு அடிப்படையின் மீது, தங்கள் கொள்கைகளை நிலை நாட்ட வேண்டிய : நால்வகை ஆட்களை, கல்வித்துறை நிபுணர்கள் என்ற சாக்கைக் காட்டி இத்திட்டத்தை ஆராயும்பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்.

மேற்படி நால்வரும் கல்வித் துறையில் நிபுணர்கள் என்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை ஆனால், ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஆராய, இந்த நிபுணர்களால் முடியுமா என்பதே கேள்வி.

இந்தத் திட்டம் இதுவரை எவ்விடத்திலும் அமுலில்லாத புதிது. எனவே தான் இதற்கு புதிய ஆரம்பக் கல்வித்திட்டம் என்ற பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது சென்னை மாகாணத்தைத் தவிர வேறே எங்கும் இத்திட்டத்தை அமுலாக்கிக் கொண்டு வர வேண்டும் என்று எவரும் முயற்சிக்கவில்லை. எனவே இது சென்னை மாகாணத்திற்கு மட்டும் தேவைப்படுகிற ஒரு திட்டமாகும், இதைநாம் விளையாட்டாகக் கூறவில்லை.

இந்த உபகண்டத்தை ஏக இந்திய ஏக இந்தியா என்று எக்காளமிடும் இன்றைய சுதந்திர சர்க்கார், ஏக இந்தியாவுக்கும் ஏற்றதாக ஒரு திட்டத்தைக் கொண்டு வராமல், தனித்தனியாக ஒவ்வொரு மாகாணத்துக்கும், ஒவ்வொரு தனிப்பட்ட திட்டத்தை ஏன் கொண்டு வர வேண்டும்?—ஏன் கொண்டு வர அனுமதிக்க வேண்டும். அதிலும் கல்வி என்பது எல்லோருக்கும் பொது, பொதுவான ஒரு கல்வியை தனித் தனியாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்துக்கும், ஒவ்வொருவிதமாக, தனித்தனியான திட்டங்களை ஏன் வகுக்க வேண்டும்–சென்னை மாகாணத்திற்கு ஒரு கல்வி, பம்பாய்மாகாணத்திற்கு ஒரு கல்வி என்று ஏதாவதிருக்கிறதா?

ஏக இந்தியாவில், கல்வி போன்ற பொதுத் திட்டங்களை, வகுக்கும் அதிகாரத்தை, டில்லி சர்க்கார் சென்னை சர்க்காருக்கு அளித்திருக்கிறதா? இந்தத் திட்டம் சென்னை மாகாணத்தை மட்டுமே பொறுத்ததென்றும் நாங்கள் இதில் தலையிட முடியாதென்றும் நேரு சர்க்கார் கூற முடியுமா. தீண்டாமை ஒழிப்பு ஏக இந்தியாவுக்கும் ஒன்றாகவே கருதப்பட்டு, சட்டமாக்கப்படுகிறதோ அதுபோலத்தானே, நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான கல்வித் திட்டமும், ஏககாலத்தில் எல்லா இடங்களிலும் அமுலாக்கப்பட வேண்டும். அதுதானே, நேர்மையும், நீதியும், முறையுமாகும்

மதுவிலக்குப் போல எங்காவதொரு மாகாணத்தில் பரீட்சித்துப் பார்த்து, பின்னர் ஏக இந்தியாவுக்கும் கொண்டுவர வேண்டிய ஒன்றல்ல இந்தக் கல்வித்திட்டம். மதுவிலக்கு சிலருக்கு கெடுதலையும், பலருக்கு நன்மையும் விளைவிக்கக் கூடியதாக உள்ளது. ஆனால் கல்வியைப் பொறுத்தவரையில் அது யாருக்குமே தீங்கு விளைவிக்காதது. எல்லோராலும் ஏகமனதாக வரவேற்கக்கூடியது. அப்படிப்பட்ட ஒன்றை சென்னை மாகாணத்தில் மட்டும் பரீட்சித்துப் பார்க்கவேண்டிய அவசியத்திலுமில்லை. எனவே மதுவிலக்கு, கண்ட்ரோல் ஒழிப்பு ஆகியவைகளில் வாங்கிய சர்டிபிகேட்டை இதிலும் வாங்கிவிடலாம் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆகவே, ஆச்சாரியார் இத்திட்டத்தை கொண்டுவந்ததற்கு, ஆரம்பக்காலத்திலிருந்து நாம் எந்தக் காரணத்தைக்கூறி வருகிறோமோ, அது தவறென்று யாரும் கூறிவிட முடியாது. அவ்வப்போது ஏற்படும் எதிர்ப்புகளைக் கண்டு, ஆச்சாரியார், தம்முடைய சாதுர்யத்தினால், திட்டம் 'அதற்காக' அல்ல "இதற்காகத்தான்" என்று கூறிவந்தபோதிலும், தகப்பன் தொழிலை பிள்ளை செய்யத்தான் வேண்டுமென்பதில் அவர் சிறிதளவும்வழுவாதவராகவே இருக்கிறார். இதற்கு எடுத்துக்காட்டாக அண்மையில் மதுரையில் ஆற்றிய சொற்பொழிவை எடுத்துக் காட்டுகிறோம். தந்தையின் தொழிலையே தனயன் செய்யவேண்டும் என்பதை வற்புறுத்தியிருக்கிறார். யார் வேண்டுமானாலும், எந்தத் தொழிலை வேண்டுமானாலும் கற்றுக் கொண்டு செய்யலாம் என்று சில காலமாகக் கூறிவந்த ஆச்சாரியார், அதனை ஆராய ஒரு கமிட்டியை சென்னையில் நியமித்துவிட்டு, மதுரைக்குப்போய், தந்தை தொழிலைத் தனயனே செய்தல்வேண்டும் என உபதேசம் செய்கிறார் என்றால், அதன் பொருள் என்ன?

ஒரு காரியம் சரியோ, தவறோ, அது ஆராயப்படவேண்டும் என்ற முடிவுக்கு வந்து, அதனை ஆராய்வதற்கு ஒரு கமிட்டியையும் நியமித்துவிட்டு, அந்தக் காரியத்தைப் போல் சிலாக்கியமானது வேறொன்றுமில்லை, அதனையே நீங்களெல்லோரும் ஆதரிக்கவேண்டுமென்று அந்தக் காரியத்தை அமுலாக்க முன்வந்த அதே ஆசாமியே ஊரூராய்ச் சென்று உபதேசம்செய்கிறார் என்றால் சென்னையில் அதற்கென ஒரு நிபுணர் கமிட்டி இருக்க வேண்டிய அவசியமென்ன? ஒன்றை ஆராய ஒரு நிபுணர் கமிட்டியை ஏற்படுத்தியபின், நிபுணர் கமிட்டியின் முடிவையறிவது தவிர அது சம்பந்தமாக, தான் பேசுவதோ, பிறரை பேசவைப்பதோ முறையா?

*

எப்படியோ ஒன்று இதை ஆராய்வதற்கென ஒரு நிபுணர் கமிட்டி நியமிக்கப்பட்டுவிட்டது. இந்தக் கமிட்டி அடிக்கடி ஆச்சாரியாரைப் பார்த்து வருவதாக செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. ஆச்சாரியார் இந்தத் திட்டத்தைக்கொண்டு வந்தவர். அவரை கமிட்டி சந்திக்கிறது. இது தவறோ, சரியோ அதைப்பற்றிக்கூட நாம் கவலைப்படவில்லை. ஆனால், ஆச்சாரியாரின் திட்டத்தை, ஏன் எதிர்க்கிறோம் என்பதின் காரணத்தைக்கூறி, எதிர்ப்பவர்கள் இந்நாட்டில் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாமே பெரும் பங்கெடுத்து அத்திட்டத்தை எதிர்க்கிறோம். அதற்காக நூற்றுக்கணக்கானவர்கள் சிறை சென்றனர். திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம் ஏன் இந்தத்திட்டத்தை எதிர்க்கிறோம் என்ற காரணத்தை இடபொழுது நியமிக்கப்பட்டிருக்கும் நிபுணர் கமிட்டி அணுகிக் கேட்குமா? கேட்க ஆச்சாரியார் சர்க்கார் அனுமதிக்குமா

வரட்டுவாதம் பயன் தராது

[இமயவரம்பன்]

ஆச்சாரியாரின் அரிய மூளை தயாரித்த ஐம்பதாண்டுத் திட்டமான புதிய கல்வித் திட்டம், அரும்பெரும் விளம்பரங்களோடு வெளிப்படுத்தப்பட்டு, அதிலுள்ள குறைகள் தெரியாதபடி மெழுகி, மூடிமறைக்கப்பட்டு எப்படியாவது காப்பாற்றப் பட்டு விட வேண்டும் என்ற 'ரத்த பாசத்தால்' உந்தப்பட்டு, கண்ணை மூடிக்கொண்டு, ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தமும், நிலையும் பலருக்கு ஏற்பட்டு விட்டதைக் காண நமக்கு பரிதாபமாக இருக்கிறது.

ஆச்சாரியார் தன் உடல் நிலை, ஓய்வு, ஆகியவைகளைக்கூட மறந்து, தினம் ஒரு கூட்டமாகச் சென்று, தான், கொண்டு வந்திருக்கும் திட்டத்தை எப்படியாவது, நிலைத்திடச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு, பணிபுரிவதும். அவருடைய அடிபிடிகளும், தொண்டரடிப்பொடியாழ்வார்களும், கூட்டங்கள் கூட்டியும், மாநாடுகள் போட்டும் புதிய திட்டத்திற்கு ஆதரவிருப்பது போல், விளம்பரப் படுத்திக் கொள்ளும் 'பெரு முயற்சிகளும்', நாட்டில் நித்திய நிகழ்ச்சிகளாகிவிட்டன.

இத்தனை பெரிய விளம்பர, விமர்சன, ஆதரவுகளுக்கிடையேயும் நாட்டிலுள்ள நல்லோர், கல்வி நிபுணர், கல்லூரிமாணவர், தொழிலாளர்கள், என்ற பல்வேறு தரத்தினரும், மற்றும் பல்வேறு கட்சியினரும், திட்டத்திலுள்ள சீர்கேடுகளை நாட்டு மக்களிடையே விளக்கியும்; பல பல முறைகளைக் கையாண்டு இந்தத் தீய திட்டத்தை கைவிடும்படி, ஆச்சாரியாரை கேட்டு வருவது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும், இருட்டடிப்பு திருப்பணிகளுக்கிடையேயும், இவை மின்னிக் கொண்டிருப்பதும், ஆச்சாரியார்களின் கிலியை அதிகப்படுத்தி விட்டிருக்கின்றன.

புதிய திட்டத்தை ஆதரிக்க புறப்பட்டுள்ள பத்திரிகைகள், கட்டுப்பாடாக, கயிறு திரிப்பதும், செய்திகளை இருட்டடிப்பு செய்வதும், திரித்துப்போடுவதுமாக இருந்து, தங்களைத்தாங்களே தைரியப்படுத்திக் கொள்வதும், மாநாடு கூட்டுபவர்கள் 'விநாயகங்களைப்' பிடித்து மாநாடுகளிலே காட்டி, தங்களைத் தாங்களே சற்று நேரம் 'ஆசுவாசப்' படுத்திக் கொள்வதையும் காண நமக்கு சிரிப்பே உண்டாகிறது.

"எவ்வளவு பெரிய மனிதர். எவ்வளவு அரிய திட்டம். இதற்கா இவ்வளவு எதிர்ப்பு", என்று, அங்கலாய்ப்போர் முதற்கொண்டு. திட்டம் சரியோ. தவறோ. ஆச்சாரியார் கொண்டு வந்து விட்டார். காங்கிரசின் மானம்பறி போகக் கூடாது, என்பதை அடிப்படையாக வைத்து, பல்வேறு பட்ட காரணங்களுக்காக புதிய கல்வித்திட்டத்தை ஆதரிக்கும், 'புத்திசாலிகளும்' சல்லடம் கட்டிக் கொண்டு புறப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு 'இக்கட்டான' நிலைமைக்கு ஆச்சாரியார் இவ்வளவு சீக்கிரத்தில் உள்ளாக்கப் படுவார் என்பது அவருக்கே கூடப் புதிராகத்தான் இருக்கும்.

ஆச்சாரியார் இந்த திட்டத்தை கொண்டு வந்த நேரத்திலே, யாரையும் கலந்தாலோசிக்காமல் செய்தது, தான், இத்திட்டத்தை மனதார, நல்லது, என்று நம்பினது தான் காரணம், என்று கூறாமல், எதையும் எல்லாரையும் கேட்டுக் கொண்டு செய்வதென்றால், முடியாத காரியம், என்று சொன்னதிலிருந்து, இந்தத் திட்டம் பற்றி பிறரைக் கலந்தாலோசித்தால், ஆரம்பத்திலேயே இது அடிபட்டுப் போய் விடும் என்று, அவருக்கிருந்த பயத்தைத்தான், நமக்குக் காட்டுகிறது. நன்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, புதியதிட்டத்தைபுகுத்த விழைந்த இந்த நல்லவர், நாளா வட்டத்தில் எதிர்ப்புத் தலைகாட்ட ஆரம்பித்ததும், தன்னை, காந்தியோடும், புத்தரோடும் ஒப்பிட்டு மற்றவர்களைத் தன்னைவிட 'மட்டம்' என்ற நிலையை விளக்க ஆரம்பித்தார். அவருடைய நிலை, மேலும் ஆட்டங்காணும்போல் இருந்தபோது, தான் கொண்டு வரும் திட்டங்கள், பொய்த்துப் போவதில்லையென்று, மதுவிலக்கையும், கண்ட்ரோல் ஒழிப்பையும், தனக்கு சர்டிபிகேட்டுகளாகக் கொடுத்த, தன் நிலையை காப்பாற்றிக் கொள்ளப் பாடுபட்டார் இது. இந்த அரிய திட்டம் சரிவர வெளியிடப்பட்டு, நடைமுறைக்கு கொண்டு வரப்படுமுன். ஆச்சாரியார் தன்னைச் சுற்றி பலமாக எழுப்பிக் கொண்ட அஸ்திவாரமாகும்.

பிறகு, ஆச்சாரியார், தன்னுடைய அருமையான திட்டத்தை 'அச்சுவேறு ஆணிவேறு' ஆகப் பிரித்து அதிலுள்ள நன்மைகளை, அதனால் ஏற்படக்கூடிய விபரங்களை '[illegible]' படலத்தில் இறங்கினர்.

புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டுவருவதன் மூலம், மூன்று மணி நேரம் படிப்புப்போக, மற்ற மூன்று மணி நேரம் தன் தகப்பன் தொழிலை மாணவர்கள் கற்க வழி செய்வதாகக் கூறினர். இது, வர்ணாசிரம முறையை நிலைநாட்டும். என்ற கண்டனக் குரல் எழுந்த உடன், ஆச்சாரியார். தகப்பன் தொழிலை மகன் கற்கவேண்டியது கட்டாயப்படுத்தப்படவில்லையென்றும், ஏதாவது ஒரு தொழிலை மாணவன் கற்கலாமென்றும், 'புது வியாக்கியானம்' கொடுக்க ஆரம்பித்தார் தன்னுடைய சூதுமதி வெட்டவெளிச்சமாக்கப்படுவதைக் கண்ட அவர், தன் முதல் 'பல்டி'யை அடித்தார். அடுத்ததாக, தொழிற்கல்வி சிறந்ததுதான் என்றபோதிலும், தொழிலைக் கற்க, ஆரம்பப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கு வயது போதாது. சிறு பிள்ளைகள் எந்தத்தொழிலையும் கற்க முடியாது என்ற 'விளக்கம்' அவருக்கு தரப்பட்ட போது, அவர் தனது இரண்டாவது 'பல்டியை' அடித்தார். அதாவது, முதல் மூன்று வகுப்புக் குழந்தைகள் தொழில் செய்யவேண்டியதில்லையென்றும் நான்காம் ஐந்தாம் வகுப்புக் குழந்தைகள் தொழில் செய்தால் போதுமென்றும் 'சமாதானம்' கூறிவிட்டார்.

முதல் மூன்று வகுப்பு குழந்தைகள், தொழில் செய்பவர்களை பார்த்துக் கொண்டிருந்தாலே போதும், என்றும், இளம் மனதில் தொழில் முறை 'பசுமரத்தாணியாகிவிடும்' என்றும், தன்னுடைய, புத்திசாலித்தனத்தின் மற்றொரு பாகத்தை வெளிப்படுத்தினர். வேறும் பார்

வைப் பழக்கத்தினாலேயே, இந்தத் தொழில் பழக்கம் வந்துவிடாது என்ற உண்மையை விளக்க ஆரம்பித்த பிறகு, இந்தப் புதிய திட்டத்தின் நோக்கமே, அதிக பிள்ளைகள் படிக்க வசதிசெய்வதுதான், என்றும், எனவே, இருவேளை பள்ளிக்கூடத்தின்மூலம் படிக்கின்ற "தொகையைவிட, அதிக தொகையான மாணவர்கள் படிக்கமுடியும், என்று காரணம், காட்டி தனது மூன்றாவது 'பல்டியை' அடித்தார்.

தற்பொழுது இருக்கின்ற பள்ளிக்கூடங்களையும் ஆசிரியர்களையும் வைத்துக்கொண்டே அதிக மாணவர்கள் படிக்க வசதிசெய்யும் நோக்கம் இருக்கிறது என்றும், இந்த பெருவாரி கல்வி பரப்புவதின் அருமை பெருமைகளை உபதேசம் செய்ய ஆரம்பித்தார், இந்த புதிய உருமாற்றத்தில், அவர் ஆரம்பத்தில் சொல்லிவந்த தொழிற்கல்வியை வளர்க்க உதவுவது இந்தத் திட்டம், என்பது, தன்னையறியாமல், அடிபட்டுப் போவதை ஆச்சாரியாரின் அரியமூளை உணரமறந்துவிட்டது.

இத்தனை கரணங்கள் போட்டாவது, அவர், எப்படியும், புதிய திட்டத்தை காப்பாற்றிவிடலாம், என்றிருந்த நிலை. இந்தப் புதியதிட்டத்திற்கு எதிர்ப்பு, எதிர்கட்சிகள், என்பவைகளால் மட்டும்தான், என்ற எண்ணம் அவருக்கு இருந்துவந்தவரையில் நிலைத்தது.

அவருடைய எண்ணத்தில் இடி விழுந்ததுபோல், காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், அவருடைய எதேச்சாதிகாரத்திற்கு எதிர்ப்பு எழுந்ததும், மளமளவென்று 'கனம்' குறைந்து, தான் தவறுசெய்ததை மன்னிக்கும்படியும், இதைப் பயன்படுத்திக்கொண்டு, எதிரிகள் வளர்ந்துவிடுவார்கள் என்ற 'பூச்சாண்டி' காட்டி காங்கிரஸ்காரர்களை ஒருவாறு திருப்திப்படுத்திய போதிலும்; வேறு வழியின்றி, பள்ளிக்கூடத்திற்குள்ளேயே, தொழில் கற்க சாதனங்களை அமைத்துத் தருகிறேன், என்ற 'வாக்குறுதி' தந்து, தன் நிலையைக் காப்பாற்றிக் கொண்டார். அவர், காங்கிரஸ் கமிட்டியில், அடைந்த 'சரணாகதியை' தேசிய ஏடுகள் வழக்கப்படி மறைத்துவிட்டாலும், 'பேரிகை' போன்ற இதழ்கள் அம்பலப்படுத்திவிட்டன.

இந்தப் பெரிய கண்டத்திலிருந்து தப்பித்துக்கொண்ட ஆச்சாரியார், தன்னை மற்றொரு பேரிடிக்கு ஆளாக்கிக்கொள்ளவேண்டிய நிலை பிறந்தது.

ஜனநாயக வழிகளில், புதிய கல்வித்திட்டத்தை, திரும்பப் பெறும்படி செய்யப்பட்ட முயற்சிகளெல்லாம், வீணானபின், கடைசி ஜனநாயக முறையான சட்டசபை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில், இந்த திட்டத்தை சிறிது காலத்திற்கு நிறுத்திவைத்து, நிபுணர் குழுவை நியமித்து ஆராய்ந்தபிறகு இதுபற்றி முடிவு செய்துகொள்ளலாம் என்ற தீர்மானம், இரண்டு அதிக வாக்குகள்மூலம் நிறைவேற்றப்பட்டது.

எதிர்ப்பையே, காணாத ஆச்சாரியார், தம் கண்முன்னாலேயே, தன்னை ஆதரிப்பார்கள், என்று கணக்கண்டுகொண்டிருந்தவர்களெல்லாம், எதிர்ப்பதைக்கண்டார். தோல்வி அறியாத நிலை, நிச்சயம் இருக்கும் என்ற ஆணவத்திலிருந்த ஆச்சாரியார், தோற்கடிக்கப்பட்டார். மூக்குடைபட்ட ஆச்சாரியார் 'மீசையில் மண்படவில்லை' என்ற பெருமையைப் பாட ஆரம்பித்தார். தீர்மானத்தை வெறும் 'சிபார்சு' என்றார். தன்னைத்தானே திருப்திபடுத்திக்கொண்டார். தீர்மானம் தோற்கடிக்கப்பட்டான பிறகு, மந்திரிசபை ராஜிநாமா செய்யவேண்டியது தான் முறை என்று அறிவுறுத்தப்பட்டபோது, அவசியமில்லை என்று 'மாக்டனால்டு' சரித்திரத்தை தனக்கு சாதகமாக்கிக் காட்டினார். இப்படி, தான் செய்த ஒவ்வொன்றுக்கும் 'நொண்டிச் சமாதானம்' கூறி, தான் செய்யப்பட்ட தவறை தொடர்ந்து மறைக்கப்பார்த்தார் ஆச்சாரியார். ஆனால், அவர் முயற்சி பாழ்பட்டுப் போயிற்று. எனவே தான், முழுமூச்சோடு, புது நாடகங்களான, மாநாடு, பொதுக்கூட்டங்கள் என இப்படி பவனிவர ஆரம்பித்திருக்கிறார்.

தான், கொண்டுவந்த திட்டத்தின்நோக்கத்திற்கே, நேர்முரணான விளக்கங்களைக்கூட, ஆச்சாரியார் தரத்தயாராகிவிட்டார். ஆனால் அதைத் திரும்பப் பெறமட்டும் அவர் சம்மதிக்கவில்லை. உண்மையிலேயே ஆச்சாரியார் தன்னுடைய திட்டம் இன்றியமையாததுதான் என்று கருதியிருந்தால், அந்தத் திட்டம், தோற்கடிக்கப்பட்டபோது அவர், நிச்சயமாக பதவியை ராஜிநாமா செய்திருக்கவேண்டும். பதவியை அவர் விடாப் பிடியாகப் பிடித்துக்கொண்டதன் மூலம், தன்னுடைய பதவியைவிட, புதிய கல்வித் திட்டம், முக்கியமல்ல என்று அவர் கருதுவதாகத்தான், நாம் கொள்ளமுடியும். அரசியல் அறிவு

தி. மு. க. தலைமை நிலைய ஆங்கில வெளியீடு

ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டிய ஆங்கில நூல்

The Answer

விலை 6 அணா

அண்ணா, சம்பத், மதியழகன், நெடுஞ்செழியன்,
என். வி. நடராசன்
ஆகியோர்
நீதிமன்றத்தில் தந்த வாக்குமூலங்கள்

விபரம்:- பத்மா பிரஸ், காஞ்சிபுரம்.

படைத்த எவரும் இதைத்தான் குறிப்பிடுவர். அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், அரசியல் வல்லுனருமான, திரு. எம். ரத்தினசாமி அவர்கள், தன்னுடைய டெமாக்ரசி (Democracy) பத்திரிகையில் இதைத்தான் குறிப்பிட்டிருக்கிறார். இதை மட்டரகங்கள் உணரவேண்டும். ஒருபுறத்திலே, தன்னுடைய திட்டத்தை தானே உதாசீனம் செய்வதும், அதுவும் சட்டப்படி, தன்னால் பாதுகாக்கப்பட வேண்டிய போற்றி வளர்க்கப்படவேண்டிய, ஒன்றை உதாசீனம் செய்வதும், மறுபுறத்தில் மாநாடு பொதுக்கூட்டம் முதலியவைகளின் மூலம் ஆதரவு தேட புறப்படுவதும் நல்லறிவு படைத்தவர்கள் செய்யக் கூடிய செயலல்ல.

பதவியை விட்டு விடக்கூடாது என்ற எண்ணம் ஒரு புறமும், தான் கொண்டதை எப்படியும் சாதித்து விடவேண்டும் என்ற மற்றோர் எண்ணமும்தான் இன்று ஆச்சாரியார் கொண்டுள்ள இரண்டு எண்ணங்கள்.

அதிமேதாவி ஆச்சாரியார், உண்மையிலேயே, தன்னுடைய திட்டத்தில் உள்ள குறைகளை நன்கு உணர்கிறார் என்பதை, அவர் படிப்படியாக அடித்த 'அந்தர்பல்டிகள்' வெளிச்சமாக்கிவிட்டன. என்றாலும், அந்தப் பெரிய மனிதர் தன் திட்டத்தை விட மறுக்கிறார். முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா என்பார்கள்; மூதறிஞர் எனப் புகழப்பட்டவர், மூர்க்கனாக மாறுகிறார். மூதறிஞரானாலும், 'தான்' என்பது அதிகமானால் மூர்க்கராக மாறாமலிருக்க வழி கிடையாது. இந்த உண்மை நம்மைவிட ஆச்சாரியாருக்கு, அதுவும் உபநிஷத் படிக்கிற அந்த உத்தமருக்கு, கீதோபதேசம் செய்கிற அந்த மறையவருக்கு, நிச்சயம் தெரிந்திருக்கவேண்டும்—தெரிந்தேயிருக்கிறது என்று நாம் மனதார நம்புகிறோம்.

என்னதான் இருந்தாலும், தான் பிடித்த பிடியை, பலமான தாக்குதலுக்குப் பிறகு, நகர்த்தினால், தன் புகழுக்குக் 'கறை' ஏற்பட்டுவிடுமே என்பதோடல்லாமல், எதிர்காலத்தில் தன் எதேச்சாதிகாரத்திற்கும் இது இறுதிக் கட்டமாகிவிடுமே என்று நினைக்கும்பொழுது, அந்த முதியவருக்கு, ஆயாசமும், அச்சமும், அகம்பாவமும் ஒன்றையொன்று முந்திக்கொண்டுதானே வரும்."

இதுதான் ஆச்சாரியாரின் உண்மையான நிலை. இது நமக்குப் புரிகிறது, தெளிவாக, நிச்சயமாக. அவருக்கும், அவருடைய 'ரதகஜ துரகபதாதிகளுக்கும்' புரிகிறது. என்றாலும், மமதை என்ற அந்த ஒன்றுதான் மனதை அலைக்கழிக்கிறது. என்ன செய்வது? மேலும் முற்றாதபடி கவனித்துக்கொள்ளக் கூடியதுதான் 'இன்றைய நிலையில்' புத்திசாலித்தனமான காரியம்.

ஆனால், ஆச்சாரியாரோ, நேர்மைப்பாதையினை மறந்து, 'குறுக்கு வழி'களிலெல்லாம், செல்லுகிறார். 'யார் என்னைக் கேட்பது? என்று திமிரோடு பேசியவர் — திரண்டு வரும் எதிர்ப்பு அலைகளைக் கண்டதும் —'நிபுணர் கமிட்டி நியமிக்கிறேன்' என்றுகூறி, தன்சர்க்காரில் வேலை பார்க்கும் ஒருவரையும், வேறு மூவரையும் நியமித்திருப்பதாக அறிவிக்கிறார். இக்கமிட்டி வழங்கும் கருத்துக்களைப்பற்றி, மக்களில், எவருக்கும் கவலையில்லை! ஏனெனில், ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் குறித்து, மக்கள் முன்பே, தீர்ப்பு வழங்கிவிட்டார்கள்!!

எனினும் எந்தெந்த 'சந்து பொந்து'கள் தன் அதிகாரப்பீடத்தைக் காப்பாற்ற உதவும் என்னும் அற்ப ஆசையில், இவ்விதமெல்லாம், ஈடுபடுகிறார். இது அவருடைய அதிகார வெறியும், சாணக்கிய மூளையும், சேர்ந்து தயாரித்த 'புதுச்சீட்டு'தான் — இக்கமிட்டி. இதனை வீண்ஜம்பம் என்றே மக்கள் மன்றம் கருதுகிறது. ஆகவே அவருக்குச் சொல்ல விரும்புகிறோம். வீண் ஜம்பம், வரட்டுவாதம் பயன்தராது தவறைஉணர்வதும் திருந்துவதும்தான் பயன்தரும் இவைகளை, காலம் கடக்குமுன், அவரே செய்துவிடுவது நல்லது. காலம் அவருக்காகக் காத்திராது —இதை ஆச்சாரியார் உணரவேண்டுகிறோம்.

அம்மனும் ஆச்சாரியாரும்!

சென்னையில், திருவாளர் ஆச்சாரியார், அண்மையில் அம்மன் உருவச் சிலையொன்றை பிரதிஷ்டை செய்து வைத்தாராம்! ஆச்சாரியார், ஆட்சிப் பொறுப்பையேந்தியவர் மட்டுமல்ல —அந்தணத் தொழிலையும் விடாதவர், என்பதை உலகுக்கு விளக்கத்தானோ, என்னவோ, அம்மன் கோயில் கட்டியோர், இந்த ஏற்பாட்டைச் செய்தது.

'அம்மனை', உட்கார வைத்து, சொற்பொழிவாற்றிய ஆச்சாரியார், வழக்கம்போல கடவுளின் மகாத்மியம் குறித்துப் பேசத் தவறவில்லை—கிராமங்கள்தோறும் அம்மனுக்கு இருக்கும் கவுரவம் —அதற்குள்ள தாத்பரியம், இத்யாதிகளை யெல்லாம் எடுத்து விளக்கி, மக்களுக்கு கடவுள் பக்தி ஏற்பட வேண்டிய அவசியத்தை, வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

ஆச்சாரியார், நாட்டுக்கு, புதியதோர் 'அம்மனை' அளித்தார் — அதனை உட்கார வைத்ததன், மூலம். இது, சென்னையில். ஆனால், இதோ, கடலூர் பட்டினத்திலுள்ள ஒரு அம்மனின், நிலை.

கடந்த 26ந்தேதி கடலூரிலுள்ள மஞ்சக்குப்பம் மாரியம்மன் கோவிலுக்கு போலீஸ் அதிகாரிகள்சென்றார்களாம். "ஆயிமகமாயி! ஆயிரம் கண்ணுடையாள்" முத்துமாரி! முகத்தாலே கட்டிடுவாள்!! என்று போலீஸ் அதிகாரிகளைக் கண்ட, கோயில் பூசாரி பாடவில்லை — பயந்து ஓடியிருக்கிறார், 'சாமி' வந்து, சாம்பிராணி போட்டு ஆடவில்லை, பூசாரி—ஓட்டமெடுத்திருக்கிறார். ஊராரின்குறைகளைப்போக்கி மக்களின் நோய் நொடிகளைத் தீர்த்து, 'புண்யப் பிரசாதங்களை' அள்ளி வழங்கும் அம்மன்கோயில் பூசாரியை, அதிகாரிகள் விடவில்லை! பிடித்தார்கள்—கைது செய்தார்கள். இழுத்துக்கொண்டு 'அம்மனிடம் சென்றார்கள் — அம்மன் கோபிக்கவில்லை! அக்கிரமக்காரர்களைப் பார்த்துப் பார்த்துத்தான் கோயில்களிலுள்ள அம்மையப்பர்கள்' கல்லாகி' விட்டார்களே!! அதிகாரிகள், அம்மனுக்குப் பின்புறம், சென்று தேடினார்கள். தேடியது, கிடைத்தது! மாரியம்மன் பின்புறம் இரண்டு சாராயப்புட்டிகள், மறைத்துவைக்கப்பட்டிருந்தன.

ஆச்சாரியார், 'அம்மன்களை' உருவாக்குகிறார்!

ஆனால், இருக்கும் 'அம்மன்களோ இந்நிலையில்!!

தாயகமே, பதில் தா!

எழுத்துச் செல்வர் கருணாநிதி எங்கே?
எண்ணற்ற தியாகச் செம்மல்கள் எங்கே?
செயல்வீரர்கள் சிவசாமி, தங்கப்பழம், சாமி, நடராசன், ரத்தினம் எங்கே?
கொள்கை உரம் பெற்று வீரப் பார்வையுடன் உலவிய கழகச் சகோதரர்கள் எங்கே?

ஏங்கியபடி கிடந்தோம்—
இன்று,

எங்கள் பொதுச்செயலாளர் அண்ணா,
மாணவர் கழகத் தலைவர் மதியழகன்,
சொற்செல்வர் சம்பத்
தமிழ்ச்செல்வர் நெடுஞ்செழியன்,
கொள்கை வீரர் நடராசன்

அனைவரும்

சிறைக்குள்! சிறைக்குள்!

*

கரமிழந்த வாலிபர்!
காலிழந்த இளைஞர்!
'உயிர்நிலை' இழந்து உலவும் உத்தமர்!
உயிர்களை இழந்த அறுவர்!
குண்டடிபட்டு கொடுமைக்காளான இக் குல விளக்குகள், இவ்வளவு கொடுமைகளைத் தாங்கவும் — உன்னைக் கட்டி ஆள்வோர் அலங்காரப் பவனி வரவும் — தங்கள் துணைவரைப் பறிகொடுத்த மகளிரும் — மணாளரைப் பிரிந்த மங்கையரும் கலங்கி நிற்பது,

ஏன்? எதனால்? யாரால்?

*

தடியடி! தண்டனை!
படுகொலை! வழக்கு!
ஆறு மாதம், மூன்று மாதம்!
அடாபிடி, அட்டகாசம்!
எத்தனை நாளைக்குத் தாயே,
எத்தனை நாளைக்கு இது?
கலங்கும் கண்ணீருடன் கேட்கிறோம்-உன் விலங்குகள் ஒடியப் பாடுபடும் நாங்கள், ஊராள்வோரால், உலர்ந்த சருகாக்கப்படுகிறோம்! உருக்குலைக்கப்படுகிறோம்!
இந்தக் கொடுமைகளை,

சகிக்கத்தான் வேண்டுமா?
சகிக்கத்தான் வேண்டுமா?

*

விம்மும் குரலுடன் கேட்கிறோம்—
வேதனை அம்புகளைத் தாங்கியபடி கேட்கிறோம்

'தகாத' ஆட்சிமுறை, என்று ஓயும்?

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.